பாங்கி புலம்பல்.

(இது வெளிப்படை.)

காலையம் போருக வாண்முகத் தாளன்பர் கையகல
மாலையம் போது வருவித்த நீர்தஞ்சை வாணன்றெவ்வர்
ஆலயம் போலுங்க ளாதவன் கோயி லழல்கொளுந்த
வேலையம் போடுழல் வீர்பரி காளென்றும் வெய்துயிர்த்தே.

இ - ள். காலையம்போருகம்போலும் ஒளியையுடைய முகத்தானைத் தலைவர் கையகல மாலையம்பொழுதை வரச்செய்த நீர் தஞ்சைவாணன் தெவ்வராலையம்போல், உங்கட் கிறைவனாகிய கதிரவன்கோயில் அழல்பற்றக் கடலில் தண்ணீரோடே யெப்போதும் நெட்டுயிர்த்து வருந்துவீராக.

காலையம்போருகம் - முறுக்கவிழ்தாமரை 'அம்போருகவாண்முகம்'- உவமைத்தொகை. 'முகத்தாள்' என்புழி இரண்டனுருபுதொக்கது. கையகல் - ஒருசொல்; அகு பிரிதல்.

† "செற்றா ரெனக்கை விடலுண்டோ நெஞ்சேயா
முற்றா ஒறுஅ தவர்." — என்பதுபோலும்.

தெவ்வர் - பகைவர். ஆதவன் - கதிரவன். கொளுந்தல் - கொளுத்தல். அம்பு - நீர். உழலுதல் - வருந்துதல். வெய்துயிர்த்தல் - நெட்டுயிர்த்தல். (க௬௩)

தலைவனிட்டத் தலைவி வருந்துதல்.

தலைவனிட்டத் தலைவி வருந்துதல் எ - து. தலைவன் வாராது நாழிகை நீட்டித்துழித் தலைவி வருந்திக்கூறுதல்.

ஆராத வின்ப விடந்தொறு நீங்கிய வாயமென்பால்
வாராத முன்னம் வருகில ராற்றஞ்சை வாணன்வெற்பில்
கூரா தரகல்கி வல்வினை யேனலங் கொள்ளைகொண்டு
தேரா தவனுட னேநென்னன் மாலையிற் சென்றவரே.

இ - ள். தஞ்சைவாணன் வெற்பில் மிகுந்த காதலைக்கொடுத்து, வல்வினையேன் நலத்தையெல்லாங் கொள்ளைகொண்டு, தேரோடுகூடிய சூரியனுடனே நெருநல்மாலைக் காலத்துச் சென்றவர் அமையாத விளையாட்டின்பத்தால் அவ்விடந்தோறும் நீங்கிய ஆயக்கூட்டம் என்னிடத்து வாராத முன்னம் வருகிலார்! யானென்செய்வேன்! எ - று.

ஆல் - அசை. கூர் - மிகுதி. ஆதரம் - காதல். நலம் - அழகு. நென்னல் - முன்னைநாள். (க௬௪)

---

† திருக்குறள், செ. க௨௪௫.

தலைவியைப் பாங்கி கழறல்.

தலைவியைப் பாங்கி கழறல் எ - து. பாங்கி நீ வருந்துவது முறைமை யன்றெனக் கட்டுரைத்தல். கழறல் என்பது கட்டுரை ; இடித்துக்கூறல் ; உறுதிச்சொல் ; இவை ஒரு பொருட்கிளவி.

சிறந்தார் தெரிந்த செழுந்தமிழ் வாணன்றென் மாறைவெற்பர்
துறந்தா ரெனையென்று சோருவ தேனித்தத் தொல்லுலகில்
பிறந்தா ரெவர்க்கும் பிரிவெய்து மால்வெய்ய பேரமர்க்கண்
புறந்தாழ் கரிய குழற்செய்ய வாயைய பூங்கொடியே.

இ - ள். வெவ்விய பெரிய போர்செய்யுங் கண்ணும், புறப்பக்கத்தே தாழ்ந்த கரியகுழலும், சிவந்தவாயும் அழகாகிய பூங்கொடிபோல்வாய் ! இந்தப் பழையவுலகின்கட் பிறந்தார் யாவர்க்கும் பிரிவுவாராமற் போகாது வந்தெய்தும் ; சிறந்த முன்னோராய்ந்த செழுந்தமிழைக் கற்ற வாணனது தென்மாறைநாட்டுத் தலைவர் என்னைவிட்டுத் துறந்தாரென்று நீ யயர்வ தென் ? இனி யயரவேண்டாம். எ - று.

சிறந்தார்-அகத்தியனார், தலைச்சங்கத்தார் முதலாயினோர். சோருதல் - அயர்தல். எண்ணும்மை தொக்குநின்றன. ஐய - அழகாகிய. (கசரு)

தலைவி முன்னிலைப் புறமொழிமொழிதல்.

தலைவி * * * மொழிதல் எ - து. பாங்கி முன்னிலையாய் நிற்கத்தலைவி அவன்மேல் வெறுப்பால் அவனைநோக்கிக் கூறாது புறமாய் மொழிதல்.

பூவலர் வாவியி னீரற்ற போதுற்ற புன்மையல்லால்
காவலர் காமந் துறக்கிலென் னுங்கடம் பாய்மதுகை
மாவல வாணன் வயற்றஞ்சை வேந்தனை வாழ்த்தல்செய்யா
மேவலர் போலுங் கழற்றுரை யாளர் வியனறிவே.

இ - ள். தலைவராசையைத் துறக்கில் பூவலரும் வாவி நீரற்றபோ துற்ற இழிவுபோலு மல்லாமல் யாதாம் ; இதனை யறியாது கட்டுரை சொல் வாரது விரிந்தவறிவு மதம்பாயும் வலியையுடைய யானைத்தொழில்வல்ல வாணனாகிய வயல்சூழ்ந்த தஞ்சைவேந்தனை வாழ்த்தல்செய்யாத பகைவ ரறிவுபோலும். எ - று.

எனவே,— காலமிடனறியாது மதிகெட்டுக்கூறுவர் பகைவர், அவரறி வையொக்கும் கட்டுரை கூறுவா ரறிவென்றவாராயிற்று.

‘பூவலர்வாவி’ - வினைத்தொகை. புன்மை - இழிவு. கடம் - மதம். மதுகை - வலி. வியன் - விரிவு. (கசக)

தலைவி பாங்கியோடுபகர்தல்.

தலைவி பாங்கியொடு பகர்தல் எ - து. வெறுப்பால் முன்னிலைப் புறமொழி கேட்ட பாங்கி தலைவியை யுபசரித்தலால் வெறுப்பு நீங்கிப் பாங்கியொடுபகர்தல்.

முலையார் முயக்கினு மல்லா விடத்தினு மூரிமுந்நீர்
அலையா ரமுதமு நஞ்சமும் போல வணங்கனையாய்
தொலையாத வின்பமுந் துன்பமுங் காட்டுவர் தூங்கருவி
மலையா சலத்தமிழ் தேர்வாணன் மாறைநம் மன்னவரே.

இ - ள். அணங்கனையாய்! தாழும் அருவியையுடைய பொதியமலையிற் பிறந்த தமிழை யாராய்ந்த வாணன் மாறைநாட்டு நம்மன்னவர் முலைபொருந்திய புணர்ச்சியினும் பிரிவினும் பெருமைபொருந்திய முந்நீராகிய கடலிடத்துப் பிறந்த அமுதும் நஞ்சும்போலத் தொலைவில்லாத இன்பமுந் துன்பமுங்காட்டுவ ராதலால் இரண்டினு மல்லராயிருந்தார். எ - று.

ஆர்தல் - பொருந்துதல். ஆர்தல் - ஈண்டுத்தோன்றுதல். தூங்கருவி - ஒலிக்குமருவி. "வான்மலைந் தெழுந்தோனை மகிழ்ந்துபறை தூங்க." — என்னுந் தொல்காப்பியச் சூத்திரவுரையாற்காண்க. மலையாசலம் - பொதியமலை. 'அமுதமும் நஞ்சமும்போல' என்பதனால் இன்பத்தினும் துன்பமிக்கென்று கூறியவாறாயிற்று. என்னை,—

† "இன்பங் கடன்மற்றுக் காம மஃதடுங்காற்
துன்ப மதனிற் பெரிது." — என்பதனானுணர்க. (கசஎ)

தலைவியைப் பாங்கி யச்சுறுத்தல்.

தலைவியைப் பாங்கி யச்சுறுத்தல் எ - து. தலைவியைப் பாங்கி அச்சமுறுத்திக் கூறுதல்.

பேணற் கரியநின் பெண்மையு நாணமும் பேணியவர்
காணத் தருமென்று காண்பதல் லாற்கழி காதனெஞ்சு
பூணத் தருகினும் பொற்பல்ல வாகுதல் கற்பல்லவால்
யாணர்த் தமிழுடை யான்வாணன் மாறையி னின்னமுதே.

இ - ள். புதிதாய்ப் புலவர்பாடுந் தமிழையெல்லாங் கொள்ளுந்தன்மையையுடைய வாணன் மாறையின் இனிய வமுதம்போன்றவளே! மிகுந்த காதலை நெஞ்சு பூணத்தருனுகிம் விரும்பற்கரிதாகிய நின் பெண்மையும் நாணமும் விரும்பியவரோ காணத்தருமென்று கருதுவ தல்லாமல், இவ்வாறு துன்பத்தா லழுங்கி அழகல்லவாகுதல் கற்பல்ல. எ - று.

---

† திருக்குறள், சே. கககூகூ.

பேணற்கரிய நின் பெண்மை - தவஞ்செய்து விரும்பினும் எய்தற்கரிய பெண்டன்மை. பேணி - விரும்பி. தேற்றேகாரம் விகாரத்தாற் றொக்கது. காண்பது - கருதுவது. பொற்பு - அழகு. யாணர் - புதுமை.

என்பதனால் யாதுகூறியதெனின்,—துன்பமுறவே அத்துன்பத்தால் நலனழியும், நலனழியவே அன்னைக் கையந்தோன்றும், தோன்றவே இற்செறிப்புவரும், வேற்றுவரைவு நேரினும் நேருமாதலான், கற்புக்கெடுமென்று அச்சமுறுத்திக் கூறியவாறாயிற்று. (கசஅ)

நீங்கற்கருமை தலைவி நினைந்திரங்கல்.

நீங்கற்கருமை தலைவி கினைந்திரங்கல் எ - து. தலைவன்விட்டு நீங்கற் கருமையைத் தலைவிநினைந்து தன்னுளிரங்கிக்கூறல்.

குன்றா கியபொன்னும் வேழக் குழாமுங் கொடைபுகழ்ந்து
சென்றார் முகக்குஞ் செழுந்தஞ்சை வாணன்றென் மாறைவெற்பில்
நன்றா மிறைவற்கு நன்றியி லேற்குமுன் னான்முகத்தோன்
ஒன்றா விதித்தில னேயுயிர் போல வுடம்பையுமே.

இ - ள். நெஞ்சமே! பொன்னாகிய மலையையும் யானைத்திரளையுங் கொடையைப் புகழ்ந்து சென்றோர்கள் பரிசிலாய்க்கொள்ளப்பட்ட செழுமையையுடைய தஞ்சைவாணனது தென்மாறைநாட்டு வெற்பிடத்து, நல்வினைசெய்த இறைவர்க்கும், தீவினை செய்த எனக்கும், நான்முகத்தோன் முன் னிருவரையும் படைக்குங் காலத்தில் உயிர்போல் உடம்பையும் ஒன்றாய் விதியாமற்போயினான்: இனிச் செய்யுமாறென்! எ - று.

வேழக்குழாம் - யானைக்கூட்டம். முகத்தல் - கொள்ளுதல். நன்றி - நல்வினை. 'முகக்குஞ் செழுந்தஞ்சை வாணன்' என்னும் பெயரெச்சம் வினைமுதலோடு முடியாது பிறவாற்றான் முடிந்தது. (கசகூ)

தலைவிக் கவன்வால் பாங்கி சாற்றல்.

(இது வெளிப்படை.)

நெஞ்சுக வாய்மல ரன்னகண் ணீர்மல்க நின்றவஞ்சொல்
கிஞ்சுக வாய்வஞ்சி கேட்டரு ளீயுங் கிளைத்தமிழோர்
தஞ்சுக வாய்மொழி நெஞ்சுடை யான்றஞ்சை வாணன்வெற்பில்
மஞ்சுக வார்த்தன வாலவர் தேரின் மணிக்குரலே.

இ - ள். நெஞ்ச முகிரும்படியாய்ந்த மலர்போன்ற கண்ணினிடத்து நீர் நிறைய நின்ற வழகிய சொல்லையும், முருக்கம்பூப்போன்ற வாயையுமுடைய வஞ்சியே! கிளைத்தமிழையுடைய பெரியோர் தம் வாயுறைவாழ்த்தாகக்கூறியமொழியை நெஞ்சிலே மறவாது வைத்திருக்குந் தன்மையனாகிய தஞ்சைவாணன் வெற்பில் வரத் தேரின் மணிக்குரல் முகிலுற வார்த்தல் யான்கேட்டேன், நீயுங்கேட்டருள்வாய். எ - று.

எனவே, — குறவர் தினைகொய்யவந்தனர், யாம் இன்று ஊர்க்கு ஆயக் கூட்டத்துடன் போவோமென்று செறிப்பறிவுறுத்தவாறாயிற்று.

கேளவர் - உறவலர். உடைக்கு - உடுத்தற்கு. ஆரம் - முத்து. கடைக்கணியார் - கடைக்கண்ணாற்பாரார். சிறப்பும்மைதொக்கது. கணியார் - வேங்கையார்; உயர்சொற்கிளவி.—

‡ "ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவியும்
ஒன்றனைக் கூறும் பன்மைக் கிளவியும்
வழக்கி னாகிய வுயர்சொற் கிளவி
இலக்கண மருங்கிற் சொல்லா றல்ல." — என்னுஞ் சூத்திரவிதியானுணர்க. கடைக்கணித்தல் - கடைக்கண்ணால் நோக்குதல். (கடுக)

தோழி தலைமகற்கு முன்னிலைப் புறமொழி மொழிந் தறிவுறுத்தல்

தோழி *** வுறுத்தல் எ - து. தலைவன் முன்னிலையாய் நிற்ப தோழி தலைமகளைக் காணாள்போலப் புறமொழியாய்ப் புட்களை நோக்கிக் கூறுவாள் போன்று செறிப்பறி வுறுத்தல்.

பயில்காள பந்திப் புயலன்ன வோதியைப் பைங்கிள்ளைகாள்
மயில்காள் சிறிது மறக்கப் பெறீர் தஞ்சை வாணன்வெற்பில்
குயில்காள மெங்கு மியம்புதண் சோலையிற் கூடியின்பம்
மயில்காள வெங்கதிர் வேலன்பர் சால வயர்ப்பினுமே.

இ - ள். பைங்கிள்ளைகாள்! மயில்காள்! நெருங்கிய கரிய பந்தியாயிருக்கின்ற புயல்போன்ற வோதியை யுடையாளைத் தஞ்சைவாணன் வெற்பில் குயில்காளம்போ லெங்கு மொலிக்குங் குளிர்ந்த சோலையிற்கூடி யின்ப மருந்தும் விடம்போன்ற வெங்கதிர் வேலையுடைய அன்பர் மிகுதியும் மறந்தாலும் நீங்கள் சற்று மறக்குந் தன்மையைப் பெறீராக. எ - று.

எனவே, — யா மூர்க்குப் போகா நின்றோ மெனச் செறிப் [illegible] த்தலாயிற்று.

[illegible] கூந் [illegible]
[illegible] தல். அயிலுதல் - அருந்துதல்.
[illegible] டம். அயாத்தல் - மறத்தல். (கடுஉ)

பாங்கி தலைமகன் முன்னின் றுணர்த்தல்.

(இது வெளிப்படை.)

கானலங் கான்மலர்க் கள்வாய்க் கருங்கணி கட்டுரையால்
கூனலஞ் சாய்பொற் குரலுங்கொய் தாரெமர் கொற்றவயாம்
ஏனலங் காவலு மின்றே யொழிந்தன மேழ்புவிக்கும்
தானலங் காரமன் னான்றஞ்சை வாணன் றமிழ்வெற்பிலே.

---

‡ தொல். சொல். கிளவியாக்கம், சூ. உஎ.

இ - ள். கொற்றவ! ஏழுலகுக்குங் கீர்த்தியால் அலங்காரம் போன்றவனுகிய தஞ்சைவாணன் வெற்பிடத்துச் சோலையில் அழகிய மணத்தோடெய் கூடிய மலரிலிருக்குங் கள்ளைத் தன்னிடத்திலே யுடைய பெரிய வேங்கைமரத்தினுடைய கட்டுரையாலே மா தலைவளைந்து சாய்ந்த பொன்னிறமாகிய தினைக்கதிரைக் கொய்கின்றாராதலால், தினைப்புனங் காவலும் இன்றொழிந்தனம். எ - று.

கானல் - சோலை. கான் - மணம். கணிகை - வேங்கை. கட்டுரை - உறுதிச்சொல்.

வேங்கை பூக்குங்காலம் தினைக்கதிர் கொய்யுங் கால மாதலின் வேங்கை கட்டுரையால் தினைக்கதிர் கொய்கின்றாரென்று கூறியது.

‡ "வாராக் காலத்து நிகழுங் காலத்தும்"—என்னுஞ் சூத்திரவிதியால் கொய்கின்றார் என்னும் நிகழ்காலச் சொல்லைக் 'கொய்தார்' என விரைவு பற்றி இறந்தகாலத்தாற் கூறினுரென வுணர்க. முன் 'இறைவனைக் குறிவர விலக்கல்' செய்யுளில் 'புனமும் பசுந்தினைச் செங்குரலேந்தும்' என்று கூறியவதனாலும் 'கொய்கின்றார்' என்றே கொள்க.

கூனல் - தலைவளைதல். குரல் - கதிர். ஏனல்-தினை. 'சோலையில் அழகிய மணத்தோடுங் கூடிய மலரிலிருக்குங் கள் வாயினிடத்து நாறுங் கரிய நிறத்தையுடைய கணிக்காரிகை கட்டுரையால்' எனினு மமையும், கணிக்காரிகையைக் கேட்டுத் தினைகொய்தல் அவர்க் கியல்பாதலின். (கஙுரு)

பாங்கி முன்னின் றுணர்த்திபோம்படைசாற்றல்.

பாங்கி * * * சாற்றல் எ - து. அவ்வாறு முன்னின் றுணர்த்திய பாங்கி யெம்மை மறவாமை வேண்டுமென்று கூறுதல்.

கனஞ்சாய நல்கிய கையுடை யானெதிர் கன்றினர்தம்
மனஞ்சாய வென்றருள் வாணன் வரோதயன் மாறைவெற்பில்
சினஞ்சாலும் வேலண்ண லேமறவே லெம்மைச் செவ்வியிரு
தனஞ்சா யினுமினி நின்னையல் லாதில்லைத் தாழ்குழற்கே.

இ - ள். கொடையில் மேகஞ்சாயக் கொடுக்கப்பட்ட கையையுடையவன் வீரத்தா லெதிராகிச் சினந்தவர் மனஞ்சாயவென்றருளிய வரோதையனுகிய வாணனது மாறைவெற்பில் கோபமமையும் வேலையுடைய தலைவனே! அழகையுடைய இருதனஞ்சாயினும் இனித்தாழ்ந்த குழலையுடையாட்குப் பற்றுக்கோடு நின்னையல்ல தில்லை யாதலால், எங்களை மறவேல்.

கனம் - மேகம். சாய்தல் - நிலைதளர்தல். நல்கல்-கொடுத்தல். மனஞ்சாய - செல்விழி னில்லாது வளைய. சினஞ்சாலும்-சினநிறையும். செவ்வி-

‡ தொல். சொல் வினையியல், சூ. ௪௪.

அழகு. தனஞ்சாய்தல் - மூலைசரிதல். 'தனஞ்சாயினும்' என்று இங்ஙனங் கூறுதல் எடுத்துக்கோடற்கண்ணே எஞ்ஞான்றும் ஒரு தன்மையவொன்று கூறியதனோடு மாறுகொள்ளுமெனின், மாறுகொள்ளாது. என்னை, —

† "நாடக வழக்கினு முலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்" — என்னுஞ் சூத்திர விதியால் ஆண்டுங் கூறியது.

நாடக வழக்கு ஈண்டுங் கூறியது உலகியல் வழக்கென் றுணர்க. பற்றுக்கோடு அவாய் நிலையான் வந்தது. (க௫௪)

கிழவோன் தஞ்சப்பெறாது நெஞ்சொடு கிளத்தல்.

கிழவோன் * * * கிளத்தல் எ - து. இவ்வாறு கூறக்கேட்ட தலைவன் வேறோர் பற்றுக்கோடுபெறாது நெஞ்சொடு கூறல்.

ஏவல ரேய்விழி மாந்தளிர் மேனிய ரேனலினிக்
காவல ரேமனங் காத்தனம் யாங்களி யானைசெம்பொன்
நாவல ரேபெற நல்குங் கைமேக நறுங்குவளை
மாவல ரேய்தொடை யான்றஞ்சை வாணன் வரையில்வந்தே.

இ - ள். மனமே! ஏவும், மலரும் போன்ற விழியினையும், மாந்தளிர் போன்ற மேனியையு முடைய அவர் இனித் தினைப்புனங் காப்பா ரல்லர்; களித்தயானையுஞ் செம்பொன்னும் நாவலர்பெறக் கொடுக்குங் கையையுடைய மேகம்போன்ற நறுங் குவளையினது கரிய மலர்பொதிந்த மாலையணிந்தவனாகிய தஞ்சைவாணன் வரையிடத்து வந்த நாம் வீணே காத்தனம். எ - று.

ஏவு - அப்பு. ஏவலர் - எண்ணும்மை தொக்கு நின்றது. ஏய்தல்-ஒப்பு. 'மாந்தளிர்மேனியர்' - உவமைத்தொகை. ஏனல் - தினை. இனி - இனிமேல். காவலர் - காப்பாரல்லர். 'யானைசெம்பொன்' - எண்ணும்மைத்தொகை. மாவலர் - கரியமலர். ஏய்தல் - பொதிதல். மனம் - அண்மைவிளி.

கிழவோன்பிரிந்துழி கிழத்தி மாலைப்பொழுதுகண் டிரங்கலும், பாங்கி புலம்புதலும், தலைவனீட்டத் தலைவி வருந்தலும், முன்னிலைப் புறமொழி மொழிதலும், பாங்கியொடு பகர்தலும், நீங்கற் கருமை தலைவி நினைந்திரங்கலும், கிழவோன் றஞ்சம் பெறாது நெஞ்சொடு கிளத்தலுமாகிய வேழும் இரங்கற்குரிய. தலைவியைப் பாங்கிகழறலும், தலைவியைப் பாங்கி யச்சுறுத்தலும், தலைவிக் கவன்வரல் பாங்கி சாற்றலுமாகிய மூன்றும் வன்புறைக்குரிய.

---

† தொல். பொருள். அகத்திணையியல், சூ. ௫௩.

'சிறைப்புறமாகச் செறிப்பறி வுறுத்தல்' முதல் நான்கு கிளவியும் இற்செறிப் புணர்த்தற் குரியவாறு காண்க. (கடுரு)

ஒருசார் பகற்குறி - முற்றும்.

பகற்குறி யிடையீடு.

அஃதாவது, பகற் குறிக்கண் வந்த தலைமகன் குறிக்கட் செல்லாது இடையீடு பட்டுப்போதல்.

* "விலக்கல் சேறல் கலக்க மென்றாங்
கப்பின்மூ வகைத்தே பகற்குறி யிடையீடு." — என்னுஞ் சூத்திரவிதியாற் பகற்குறி யிடையீடு மூவகைப்படும்.

இறைவனைப் பாங்கி தறிவரல் விலக்கல்.

(இது வெளிப்படை.)

புனமும் பசுந்தினைச் செங்குர லேந்தும் புகன்றகிள்ளை
இனமுங் குழீஇவந் திறைகொள்ளு மாலிறை யார்வளையும்
மனமுங் கவர்வெற்ப வாணன்றென் மாறை மடப்பிடியும்
அனமுந் தொழுநடை பாற்பல கால்வரு மன்னையுமே.

இ-ள் தலைவி கையின்கண் நிறைந்தவளையும், அவள் மனமும் இரண்டையுங் கவர்ந்து கொள்ளும் வெற்பனே! இப்புனமும் பசிய தினையினது முற்றிச் சிவந்த கதிரையேந்தி நிற்கும்; இவள் சொல்லைப்போற் சொல்லப்பட்ட கிளியினமுங் கூடிவந்து தங்கும் வாணன் தென்மாறை நாட்டு மடப்பத்தோடு கூடிய பிடியும் அன்னமுந் தொழும் நடையினை யுடையாள் பக்கல் அன்னையும் பல்கால்வரும். எ - று.

எனவே, —தலைவியும் புனம்விட்டு நீங்கத்தக்காளல்லள், நீயும் இங்கு வாரற்க வெனக் குறிப்பாற் பெறப்பட்டது.

குரல் - கதிர். குழீஇ வருதல் - பலபல தொகுதியாய்க் கூடிவருதல். இறைகொள்ளுதல் - தங்குதல். இறை - ஆகுபெயர். தொழுநடை - ஆகுபெயர். கவர்தல் - கொள்ளுதல். (கடுசு)

இறைவியைப் பாங்கி தறிவரல் விலக்கல்.

(இது வெளிப்படை.)

கந்துசுற் றுங்கடன் ஞாலமெல் லாம்புகழ் காமன்வளர்
சந்துசுற் றுங்கொங்கை மங்கையர் வேள்சஞ் சரீசகறை
வந்துசுற் றுந்தொங்கல் வாணன்றென் மாறை வரையின்மலர்க்
கொந்துசுற் றுங்குழ லாய்செல்ல லீயக் குளிர்பொழிற்கே.

---

* அகப்பொருள்விளக்கம், களவியல், சூ. ருகூ.

இ - ள். சங்கு சுற்றுங்கடல் சூழ்ந்த வுலகமெல்லாம் புகழப்பட்ட பெயரைப் படைத்து நாட்கு நாள் வளருந் தகைமையையுடைய சந்தனந் திமிருங் கொங்கையை யுடைய மங்கையர்க்கு வேளையொத்த சஞ்சரீகம் மணத்தால் வந்து சுற்றுந் தொங்கலையணிந்த வாணன் தென்மாறை வரையிடத்துள்ள மலர்க்கொத்துச் சுற்றிய குழலாய்! குளிர்ந்த பொழிலிடத்து நீ செல்லற்க. எ - று.

கந்து - சங்கம். நாமன் - பெயர். சந்து - சந்தனம். சுற்றல் - திமிர்தல். சஞ்சரீகம் - வண்டு. நறை - மணம். கொந்து-கொத்து; மெலிந்து நின்றது. 'காமன்வேள்' என்னும் வினைக்குறிப்பு முற்று எச்சமாய்த்திரிந்து நின்றது.

இறைமகளாளிடம் நோக்கி யழுங்கல்.

(இது வெளிப்படை.) அழுங்கல் - தன்னுளிரங்கல்.

அருவித் தடமு மணிமுத்த யாறு மவனியெங்கும்
திருவித் தியதஞ்சை வாணன் சிலம்புமிச் சிற்றிலும்பேர்
இருவிப் புனமுமின் றென்னினைக் கின்றன வென்னையின்னே
மருவிப் பிரிபவர் போலில்லை யேமண்ணில் வன்கண்ணரே.

இ - ள். சிற்றருவி வந்து விழும் பொய்கையும், ஒழுங்காய் முத்துக்களைக் கொழித்துவரும் பேரருவி யாறும், புவியெங்குஞ் செல்வத்தையே வெள்ளாண்மையாய் விதைக்கப்பட்ட வாணனது சிலம்பும், இச்சிற்றில்லமும் பெரிய தாளையுடைய புனமும், இன்றென்னை யென்னாக நினைக்கின்றனவோ! இப்போது பலநாளும் மருவிப் பிரிபவர்போல் உலகின் வன்கண்ணரில்லை. எ - று.

உம்மை - எண்ணும்மை. தடம் - பொய்கை. இருவி - தினைத்தாள். இன்னே - இப்போது. வன்கண்ணர் - கொடியர். (கஙஅ)

பாங்கி ஆடிடம்விடுத்துக் கொண்டகறல்.

பாங்கி ஆடிடம் விடுத்துக் கொண்டகறல் எ - து. பாங்கி விளையாடுமிடம் விட்டு நீக்கித் தலைவியைக்கொண்டு தம்மூர்க்குப் போதல்.

உன்னைய ராவல்கு னல்லவ ரேயென் றுசாவினெங்கள்
மன்னைய ராமல் வகுத்துரை நீதஞ்சை வாணன்வெற்பின்
என்னைய ராணைகொண் டேகுகின் றேனிவை யித்தனையும்
பின்னைய ராதொழி வாயித னேயிது பெற்றனமே.

இ - ள். பரணே! நீயும் யானும் இந்தப்பிரிவைப் பெற்றனமே! உன்னை யெங்கள் மன்னுகிய தலைவர் வந்து அராவல்குல் நல்லவரெங்கே யென்று உசாவில், அயர்ச்சியடையாமல் நீ வகுத்துச்சொல்வாய்; தஞ்சை

வாணன் வெற்பில் என்னையரோவலால் தலைவியைக்கொண்டு ஊர்க்கேகின்றனன்; ஆடிடம் நோக்கியெழுங்கியதும், ஆடிடம் விடுத்துக்கொண்டகறலும், உன்னுடன் சொல்கின்ற சொற்களுமாகிய விவையித்தனையும் பின் மறவா தொழிவாயாக. எ - று.

'நல்லவர்' என்புழி 'எங்கே' என வருவித்துரைக்க. 'அராவல்குல்' - உவமைத்தொகை. ஏகாரம் - அசைநிலை. உசாதல் - வினுதல். அயர்ச்சி - தளர்ச்சி. என்னையர் - ஈன்றோர். ஆணை - ஏவல். அயர்தல் - மறத்தல். இதண் - பரண். (கடுகூ)

இத்துணையும் ஆறநாட் செய்தியென்றுணர்க.

பின்னுள் நெடுந்தகை துறிவயின் நீடுசென்றிரங்கல்.

பின்னுள் * * * திரங்கல் எ - து. ஏழாநாள் தலைவன் குறியிடமாகிய மாதவிப்பந்தரிடத்து வந்து நீட்டித்து நினைந்திரங்கல்.

மான்கா ணிகரின் மடமயில் காடஞ்சை வாணன்வெற்பில்
தேன்கா ணிரைமென் சிறைக்கிள்ளை காளென் றெருமரனேய்
தான்கா ணியகொலிச் சந்தனச் சோலையைத் தன்னையின்றி
யான்கா ணியகொலெ ழுந்தரு ளாததின் றென்னுயிரோ.

இ - ள். மான்காள்! உவமையில்லாத மடப்பத்தையுடைய மயில்காள்! தஞ்சைவாணன் வெற்பிடத்திருக்கின்ற வண்டுகாள்! ஒழுங்காய் வருகின்ற மெல்லிய சிறகையுடைய கிளிகாள்! இன்று என்னுடைய சுழலும் வேட்கைநோயைத் தானறியவோ! இச்சந்தனச்சோலையிற் கரந்திருக்கின்ற தன்னையின்றி யான் தேடிக்காணவோ! என்னுயிர்போல்வாள் எழுந்தருளாதது. எ - று.

தெருமரல் - சுழற்சி. 'சோலையை' என்புழி வேற்றுமை மயக்கம். உயிர் - ஆகுபெயர். (கக0)

தலைவன் வறுங்களநாடி மறுகல்.

தலைவன் வறுங்களநாடி மறுகல் எ - து. தலைவியில்லாத தினைப்புனத்தை நோக்கி வருந்துதல்.

செங்கேழ் விழிக்கு மொழிக்கும் பகைதிருப் பாற்கடலும்
பங்கே ருகமும் பயந்தன வாயினும் பைங்கிள்ளைகாள்
சங்கேய் தடந்துறை சூழ்தஞ்சை வாணன் றரியலர்போல்
எங்கே யினித்தங்கு வாரோனல் காத்திங் கிருந்தவரோ.

இ - ள். பைங்கிள்ளைகாள்! செவ்வரிபொருந்திய விழிக்கும் மொழிக்கும் தாமரையும் திருப்பாற்கடலு மாதனைப்பெற்றனவாயினும் பகையாயின

வாதலால், தினைப்புனங் காத்திருந்தவர் சங்குபொருந்திய பெரிய வைகைத்துறைசூழ்ந்த தஞ்சைவாணன் தரியலர்போல் இன்றெங்கே தங்குவார்?

இது மொழிமாற்று நிரனிறை.—

“ ஆடவர்க ளெவ்வா றகன்றொழிவார் வெஃகாவும்
பாடகமு மூரகமும் பஞ்சரமாய் — நீடியமால்
நின்றா னிருந்தான் கிடந்தா னிதுவன்றோ
மன்றூர் மதிற்கச்சி மாண்பு.” — என்றாற்போல நிரனிறை மொழிமாறி நின்றது.

கேழ் - நிறம். பங்கேருகம் - தாமரை. இடமாயினதன்றி பயந்ததின்றேயெனின், சீதை யிலங்கையில் பொய்கைத் தாமரையிற் பிறந்தாளென்பது இராமர்கதையிற் கண்டுகொள்க. துறை - வைகைத்துறை. தரியலர் - பகைவர். ஏனல் - தினை. “கோடாப்புகழ்மாறன்” என்னுஞ் செய்யுளும் ‘வறுங்களநாடி மறுகல்’ என்றே கொள்க. (கசுக)

குறுந்தொடி வாழுமூர்நோக்கி மதிமயங்கல்.

குறுந்தொடி * * * மயங்கல் எ - து. தலைவியின் ஊர் தேடிச் சேறுமெனில் அறிந்திலமென்று மதிமயங்கிக் கூறல்.

பெறவரி தாலவள் பின்சென்ற நெஞ்சமும் பேணலர்க்கு
மறவரி தானன்ன வாணன்றென் மாறை வரைப்புனஞ்சூழ்
நறவரி தாழ்முல்லை நாண்மல ரோதி நகருமெனக்
குறவரி தாமென்செய் வேனென்று சோருமென் னாருயிரே.

இ - ள். அவளைப் பெறுதலரிதாயது மன்றி அவள் பின்னே தொடர்ந்து சென்ற நெஞ்சமும் மீட்டு நாம் பெறவேண்டுமெனிற் பெறுதற்கரிதாயது. பகைவர்க்கு வீரம்பொருந்திய சிங்கத்தையொத்த வாணன் தென்மாறை வரைப்புனஞ் சூழ்ந்த கள்ளால் வண்டு தாழப்பட்ட முல்லைநாண் மலரை யணிந்த குழலையுடையாளது நகரும் எனக்கு உறுதற்கரிதாதலான், என்செய்வேனென்று என்னைப்பற்ற உயிர் சோராநிற்கும். எ - று.

எனவே,— இதற்குச் செய்யுமா றறிந்திலேனென மதிமயங்கிக் கூறிய வாறாயிற்று.

மதி - அறிவு. ஆல் - அசை. பேணலர் - பகைவர். மறவரி - வீரச்சிங்கம். ‘சூழ்ந்த’ என்னும் பெயரெச்சம் ‘நகர்’ என்னும் பெயர்கொண்டு முடிந்தது. நெஞ்சமும் என்னும் உம்மை எச்சவும்மை. நறவு - கள்ளு. அரி - வண்டு. ‘தாழ்முல்லை’ - வினைத்தொகை. ‘நாள்மலரோதி’ - ஆகுபெயர். முன்னர் ‘இடமணித்தென்றல்’ என்னுஞ் செய்யுளில் தன்னூரும் அவளூரும் ஒல்லையென்று கூறினவன் இங்ஙனம் ஊரறியேனென்று

கூறியது முன்கூறியதனேடு மாறுகொள்ளுமெனின், மதிமயங்கிக் கூற லான் மாறுகொள்ளாதென்றுணர்க. (கசுஉ)

'இவற்றுள் முன்னைய விரண்டும் விலக்கற்குரியன. '(பாங்கி யாடிடம் விடுத்துக்கொண் டகறல்' ஒன்றும் சேரற்குரித்து. ஏனைய நான்கும் கலக் கத்திற் குரியன.

பகற்குறியிடையீடு - முற்றும்.

இரவுக்குறி.

அஃதாவது, தலைவன் தலைவியை இரவுக்குறியிற் கூடுதல்.

* "வேண்டன் மறுத்த லுடன்படல் கூட்டல்
கூடல் பாராட்டல் பாங்கிற் கூட்ட
லுயங்க னீங்கலென் றௌன்பது வகைத்தே
குறிதானே." — என்னுஞ் சூத்திர
கெப்படும்.

...விருட்குறி வேண்டல்.

...ண்டல் எ - து தலைவன் இருட்குறியை

...மபதிக் கேகவொண் ணுது விதம்விதமாய்
...த் தென்றூம புரந்தரு வாணன்றென் மாறையன்னீர்
...ருரும் தெங்களைப் போலெய்து மோகங்கு லுங்களுக்கே.

இ - ள். வகைவகையாய் வரும் விருந்தை யெஞ்ஞான்று மோம்பும் வாணன் தென்மாறை நாடுபோல்வீர்! சூல்கொண்டு முகில் எண்டிசையும் பெரிய மழையைப் பெய்தது, ஆதலால் உள்ளத்தினிடையே அச்சமிருந் தால் எம்பதிக்குச் செல்லுதல் கூடாது, இற்றைக்கு வைகுதல் வேண்டும்; எங்களைப்போல் ஒப்பற்ற விருந்து இந்தக் கங்குலின்கண் உங்களுக்கு நீர் வருந்தித்தேடுகினும் கிடைக்குமோ? சொல்லுவீராக. எ - று.

கரு - சூல். கனம் - முகில். கான்றல் - பெய்தல். வெருவு - அச் சம். ஏக - போக. ஒண்ணுது - கூடாது. விருந்து புரத்தல் - விருந் தோம்பல். அனீர் - உயர்சொற்கிளவி. (கசுக.)

---

* அகப்பொருள்விளக்கம், களவியல், சூ. சுக.

பாங்கி நெறியின தருமைகூறல்.
(இது வெளிப்படை.)

மலைமாது வல்லவன் வாணன் வரோதயன் மாறைவெற்பில்
சிலைமா லுருமெங்குந் தீயுமி ழாநிற்குஞ் சிங்கமெங்கும்
கொலைமா கரியிரை தேர்ந்துழ லாநிற்குங் கொற்றவபொன்
கலைமா னுறைபதி நீவரு மாறென்கொல் கங்குலிலே.

இ - ள். வீரமகட்குக் கணவனாகிய வாணனென்னும் வரோதயன் வெற்பிடத்திற்கொற்றவனே! மேகலைபொருந்திய மானுறைகின்ற பதிக்கு நீ வருகின்றவழி வில்லொடுகூடிய மேகத்திடத்து இடிகளெங்குந் தீயைக் கக்காநிற்கும், சிங்கங்கள் எவ்விடத்துங் கொல்லுந்தொழிலையுடைய கரிகளை யிரையாகத்தேடி வருந்தித் திரியாநிற்கும் கங்குற்பொழுதில் நீ வந்ததெப்படியோ? எ - று.

எனவே,-- நீ வருதல் தருமியன் நோக்கி மதிமயங்கல்.

மலைமாது - வீரமகள். மலைதல் து. தலைவியின் ஊர் தேடிச் சேறு
மேகம், உரும் - இடி. உமிழ்தல் - கூறல்.
உழலல் - வருந்தித்திரிதல். பொற்கலைமால்

இறையோன் நெறியின
(இது வெளிப்

நெஞ்சமும் பேணலர்
ர் மாறை வரைப்புனஞ்சூழ்
வடுவரி நீள்கண்ணரி யஞ்சலம் ய ராதி நகருமெனக்
கொடுவரி கேழற் குழாம்பொரு சோருமென் னேருயிரே.
தடுவரி தாவு மடுக்கமுஞ் சூர்வழங் காறுமைன் பின்னே தொட
கடுவரி நாகக் தவர்மல்கு கல்லளைக் கானமுமே. பெறுதற்கரிதா

இ - ள். வடுப்போன்று வரியோடுகூடிய நீண்ட கண்ணையுடையாய்! தஞ்சைவாணன் வெற்பிடத்துப் புலிக்குழாமும், பன்றிக்குழாமும் ஒன்றோடொன்று பொரப்பட்ட கொல்லைக்காடும், குஞ்சரத்தைத் தேடிக்கொல்லுஞ் சிங்கந் தாவப்பட்ட மலைப்பக்கமும், அச்சத்தைக்கொடுக்குஞ் சூரரமகளென்னுந் தெய்வப்பெண் ணியங்கும் வழியும், ஐந்து வாயும் விடமும் வரியுமுடைய நாகங்கள் தவர்ந்து செல்லும் நெருங்கு கற்களின் வளைகளையுடைய காடும் யாமஞ்சலம். எ - று.

வடு - மாவடு. வரி - செவ்வரி. கொடுவரி - புலி. கேழல் - பன்றி. தேர்தல் - ஆராய்தல். அடுக்கம் - மலைப்பக்கம். சூர் - சூரரமகள். ஆறு - வழி. வழங்கல் - இயங்கல். தவர் - தவர்தல். கல்லளை - கல்வளை. அடுதல் - கொல்லுதல். அரி - சிங்கம். அடு - முற்றியலுகர மாதலான் வகர வுடம்படுமெய்பெற்றது. தாவுதல் - பாய்தல். (கசு)

பாங்கி யவனாட்டணி யியல்வினாதல்.

பாங்கி யவனாட்டணி யியல்வினாதல் எ - து. தலைவன் நாட்டுப்பெண்க ளணியும் அணியையும் இயலையும் வினாதல். இயல் - புனைதல், முடித்தல், விளையாடிடம் முதலியன.

எனவே, — தலைவன் நெறியினது எளிமை கூறியவழி நன்றென்று கூட்டற்கு உடம்பட்டுக் கூறாது, அணியியல் வினாதல் வினாவழுவெனின், அன்று. தலைவனை அவனாட்டணியியல் வினாவுழித் தலைவன் தன்னாட்டணியியல் வினாவும், வினாவுழி அணியியல் கூறும்வழி அதுவே குறியிட மாகக் கூறலாமென்று கருதிப் பாங்கி வினாவியவாறென் றுணர்க.

பூந்தழை யாது மலைமலர் யாது புனையிழையும்
சாந்தமும் யாது தடம்பொழில் யாது தரணியின்மேல்
மாந்தரில் வேளன்ன வாணன்றென் மாறை வளநகர்சூழ்
தேந்தரு சோலைவெற் பாவுங்க ணாட்டுறை செல்வியர்க்கே.

இ - ள். புவியின்மேல் மாந்தருக்குள் வேளையொத்த வாணன் தென் மாறை வளநகர் சூழ் தேனைத் தரும் மலரையுடைய சோலைவெற்பனே! உங்கள் நாட்டுறையுள் செல்வியர்க் கிடையிலுடுக்கும் பூந்தழையாது? சூடும் மலர் யாது? அணியும் அணியொடு பூசுஞ் சந்தனம் யாது? விளையாடும் பெரிய பொழில் யாது? சொல்வாயாக. எ - று.

மலைதல் - சூடுதல். புனைதல் - அணிதல். இழை - அணி. உம்மை இரண்டும் அசைநிலை. எண்ணும்மை யாகாதோவெனின், ஆயின் பன்மை வாசகங்கொண்டு முடியுமாதலான், எண்ணும்மை யாகாதால் மூன்றனுருபு வருவித்துரைக்கப்பட்டது. தடம்பொழில் - பெரியபொழில். தேம்-தேன்.

தலைவ னவனாட் டணியியல் வினாதல்.

தலைவ னவனாட் டணியியல் வினாதல் எ - து. பாங்கி குறிப்பறிந்து அவனாட்டணி யியலை தலைவன் வினாதல்.

எந்நாட் டவரணி கூறியன் பேறிங் கிகல்வடிவேல் [மேல்
மைந்நாட்ட வெண்முத்த வாணகை யாய்தஞ்சை வாணன்மென்
உன்னாட் டரிவைய ராரிடஞ் சாந்த மொளியிழைபூ
மொய்ந்நாட் டழையொடெல் லாமொழி யாமன் மொழியெனக்கே.

இ - ள். போர்செய்யுங் கூரிய வேல்போன்ற மையெழுதிய நாட்டத் தையும், வெண்முத்தம்போன்ற வொளிநகையையு முடையாய்! எங்க ணாட் டவரணியும் மணிமுதலிய கூறிப் பெறுவதியாது, தஞ்சைவாணன் மன்

மேல் இவ்விடத்து உங்கள் காட்டரிவையர் ஆடிடமும், பூசுஞ் சாந்தமும், அணியு மொளிப்பூணும், முடிக்கும் பூவும், மொய்த்த காட்டமைழயோடு எல்லாம் விடாமல் எனக்கு மொழிவாயாக. எ - று.

ஈங்கு - இவ்விடம். இகல் - போர். காட்டம் - கண். வாள் - ஒளி. 'வடிவேல் காட்டம்,' 'வெண்முத்தநகை' இரண்டும் உவமைத்தொகை. மொய்த்தல் - செறிதல். (கஅஎ)

தன்னுட் டணியியல் பாங்கி சாற்றல்.

(இது வெளிப்படை.)

வகைகொண்ட மாந்தழை காந்தளம் போது மருப்பின்முத்தம்
தகைகொண்ட சந்தனச் சாந்தணிந் தாடுவர் தஞ்சையர்கோன்[தூர்
மிகைகொண்ட தெவ்வரை வென்கண்ட வாணன்வெற் பாவெம
நகைகொண்ட வல்லியன் னொல்லி நாக நறுநிழலே.

இ - ள். குற்றங்கண்ட தெவ்வரைப்புறங்கண்ட தஞ்சையர் கோனுகிய வாணன் வெற்பனே! எமதூரிடத்து மகிழ்ச்சிகொண்ட வல்லிபோல்வார், வகைகொண்ட மாந்தழை, காந்தளம் போது, யானைக்கோட்டு முத்தம், அழகுகொண்ட சந்தனச்சாந்து, இவையணிந்து கங்குற்காலத்துப் புன்னாகத்தின் நறிய நிழலில் விளையாடுபவர். எ - று.

எனவே,—குறியிடங் கூறியவாருயிற்று. இரவுக்குறியிடம் மனையைச் சுற்றி வளைந்த மதிலகத்தென் றுணர்க.

'மிகை கொண்ட தெவ்வரை வென்கண்ட தஞ்சையர் கோனுகிய வாணன்' என முடிக்க. 'நிழலிலாடுவர்' என இயையும். 'வகைகொண்ட' என்பதனைப் 'போதும்' முதலியவற்றிற்குங் கூட்டுக.

வகை கொள்ளலாவது:— தழை வகையிற்கொண்ட மாந்தழையும், போது வகையிற்கொண்ட காந்தட் போதும், முத்தவகையிற் கொண்ட யானைக்கோட்டு முத்தமும், சந்தனவகையிற்கொண்ட தகைகொண்ட சந்தனமுமென் றுணர்க.

தகை - அழகு. மிகை - குற்றம். வென் - புறம். நகை - மகிழ்ச்சி. எல்லி - இரா. உடுப்பதற்கும், சூடுவதற்கும், பூண்பதற்கும் அணிந்து என்னுஞ் சொல் பொதுவாகலான் அச்சொற்கொண்டு ஒரு முடிபாக்கிக் கூறியவா றுணர்க. (கஅஅ)

இறைவிக் கிறையோன் குறையறி வுறுத்தல்.

இறைவிக்கு * * * வுறுத்தல் எ - து. பாங்கி தலைவனை யோரிடத்து நிறுவி தலைவிபக்கற்சென்று தலைமகன் குறையை யறிவித்தல்.

புயலே றதிர்தொறும் பொங்குளை மீதெழப் போதகந்தேர்ந்
தியலே றதிரு மிருங்கங்குல் வாய்முத்த மீன்றுசங்கம்
வயலே றணைவள ருந்தஞ்சை வாணன் வரையினுண்கண்
கயலே றனையநின் பால்வரல் வேண்டினர் காதலரே.

இ - ள். இடியதிருந்தொறும் மிகுந்த மயிரைச் சிலிர்த்து யானையைத்தேடி யியங்குஞ் சிங்கவேறு வாய்விடும் பெரிய கங்குலிடத்துச் சங்கமுத்தங்களை யீன்று வயலி னுயர்ந்த வரம்பிலே துயிலுந் தஞ்சைவாணன் வரையிடத்துக் கயலேறுபோன்ற மையுண்ட கண்ணையுடைய நின்பக்கல் வரத்தக்க தலைவர் விரும்பினர். எ - று.

புயலேறு - இடி. பொங்குதல் - மிகுதல். உளை - மயிர். மீதெழல் - மேலே சிலிர்த்தல். போதகம் - யானை. தேர்தல் - தேடுதல். இயலல் - இயங்குதல். ஏறு - சிங்கவேறு. இடித்தவுடன் மயிர்சிலிர்த்துச் சிங்கம் யானையைத் தேடுமென்றது, இடியென் றறியாது களிறுபிளிறிய தென்று கருதித் தேடியவாறென் றுணர்க. 'சங்கமுத்த மீன்று' எனவும், 'கயலே றனைய வுண்கண்' எனவும் மாறுக. கயலேறு மீன்களிற் சிறந்தது. தலைவி - முன்னிலையெச்சம். (கசுகூ)

நேரா திறைவி நெஞ்சொடு கிளத்தல்.

நேரா திறைவி நெஞ்சொடு கிளத்தல் எ - து. இவ்வாறு கூறக்கேட்ட தலைவி இசையாது தன் னெஞ்சொடு கூறுதல்.

விடவார் கணைவிழி மெல்லியன் மாதனை மேதினியோர்
மடவா ரெனுமுரை வாய்மைநெஞ் சேதஞ்சை வாணன்வெற்பிற்
கடவா ரணந்திரி கங்குனங் கண்ணன்ன காதலர்முள்
பிடவார் சிறுநெறி வாய்வரல் வேண்டினன் பெண்ணணங்கே

இ - ள். நெஞ்சே! தஞ்சைவாணன் பகைவரைப்போல் மதம்பொழியும் யானைதிரியுங் கங்குலில் முட்பிடவார்ந்த சிறுநெறியிடத்து நங்கண்போற்சிறந்த காதலர் வர அணங்குபோலும் பெண் விரும்பின ளாதலான், விடம்பொருந்திய கொடிய கணைபோலும் விழியையும் மெல்லிய இயலினையு முடைய மாதனை உலகினுள்ளோர் மடவாரென்று கூறுமுரை வாய்மைதானே! எ - று.

'கணைவிழி' - உவமைத்தொகை. மடவார் - அறிவிலார். வாய்மை - உண்மை. கடவாரணம் - மதவாரணம். பிடவு - ஓர் மரம். சிறுநெறி - அருநெறி. 'பெண்ணணங்கு' - பின்மொழி நிலையல். (கஎ௦)

நேரிழை பாங்கியோடு நேர்ந்துரைத்தல்.

நேரிழை * * * துரைத்தல். எ - து. நெஞ்சொடு கூறிய தலைவி பாங்கியோ டுடன்பட்டுக் கூறுதல்.

வெங்குல வாரண மேற்றவர்க் கேகலகி வேற்றாசர்
தங்குல வாழ்வு தவிர்த்தருள் வாணன் றமிழ்ச்சிலம்பில்
கங்குல வாவினர் காதல ராயிற் களிப்பயந்த
கொங்குல வாவலர் சூழ்குழ லாயென்கொல் கூறுவதே.

இ - ள். வெவ்விய கூட்டமாகிய யானைகளை யிரப்போர்க்குக் கொடுத்துப் பகைவேந்தர் தங்குலத்தினுள்ளோர் வாழ்வெல்லாந் தவிர்த்தருள் வாணன் தமிழ்ச்சிலம்பிடத்து வண்டுகட்குக் களிப்பைக் கொடுத்த மணம் வாடாத மலர்சூழ்ந்த குழலாய்! காதலர் இரவுக்குறியைக் காதலித்தாராயின் யான் மறுவார்த்தை கூறுவதென்? எ - று.

எனவே, — நேர்ந்தமையாயிற்று.

குலம் - கூட்டம். தமிழ்ச்சிலம்பு - பொதியமலை. களி - களிப்பு, களிப்புப் பயந்த மணம் என்றதனால் வண்டு வருவித்தாம்; கொங்கு - மணம். உலவா - வாடா. (கஎக)

நேர்ந்தமை பாங்கி நெடுந்தகைக் குரைத்தல்.
(இது வெளிப்படை.)

பரவாத வண்ணம் பரவியும் பாதம் பணிந்துநெஞ்சக்
கரவாத பொன்னை நின் காரண மாகக் கயிலையென்றே
வரவா தவனஞ்சும் வெண்மா ளிகைத்தஞ்சை வாணன்வெற்பா
இரவாத வண்ணமெல் லாமிரந் தேனிவ் விரவிடையே.

இ - ள். வெண்சாந்து பூசியவதனாற் கயிலாயமலையென்று கதிரோன் வருதற் கஞ்சும் மாளிகையுடைய தஞ்சைவாணன் வெற்பனே! நெஞ்சத்தில் நின் காதலை மறையாத பொன்னை நின் பொருட்டாகப் புகழாத வண்ணமெல்லாம் புகழ்ந்தும், பாதங்களைப் பலகாற் பணிந்தும், இவ்விடையிருளின்கண் அவள் மன மிசைதற்கு இரவாத முறைமையெல்லாம் இரந்தேன். எ - று.

பரவுதல் - புகழ்தல். கரத்தல் - மறைத்தல். பொன் - திருமகள். ஆதவன் - கதிரோன். வண்ணம் இரண்டும் முறைமை. (கஎஉ)

குறியிடை நிறீஇத் தாய்துயி லறிதல்.

குறியிடை நிறீஇத் தாய்துயி லறிதல் எ - து. பாங்கி தலைவனைக் குறியிடத்து நிறுத்தித் தாயினது துயிலையறிதல்.

மாகந் தரியலர்க் கீந்தருள் வாணன்றென் மாறைவெற்பில்
மேகந் தருமின் னிடையன்ன மேவினா நாண்மலர்வேய்
காகந் தழுவுங் குடம்பையின் வாய்நடு நாளிரவில்
சோகந் தவிர்வில வாய்த்துயி லாதென் றேன்கைகளே.

இ - ள். தன்னைச் சேராத பகைவர்க்கு வானுலகத்தை யளித்த ருள் வாணன் தென்மாறை வெற்பிடத்து மேகங்கொடுக்கும் மின்போன்ற விடையையுடைய அன்னமே! மணநாண்மலர் பொருந்திய புன்னைகத் தைத் தழுவுங் குடம்பை யிடத்தில் இரவில் இடையாமத்து மயில்கள் துன்பத்தை நீங்காவாய்த் துயிலாதென்? எ - று.

நாகம் - வானுலகு. தரியலர் - பகைவர். குடம்பை - கூடு. வேய் தல் - பொருந்துதல். *சோகம் - துன்பம். தோகை - மயில். (கஎங)

இறைவிக் கிறைவன் வரவறி வுறுத்தல்.

(இது வெளிப்படை.) வரவு-குறியிடத்து வரவு.

நாணுங் கனிந்தசொல் லாய்நங் கடிமனைக்கே
வாவின் பெருமையி னற்றஞ்சை வாணன்வெற்பில்
ர சோகந் தருஞ்செழும் போதுங் கொழுந்தழையும்
கலந் தழீஇயக லாது தணந்தவரே.

இ - ள். தஞ்சைவாணன் வெற்பில் கந்தாரம் நாணும் தித்தித்த கொத்தார்ந்த வசோகத்தரு தரப்பட்ட செழும்போதுங் யுந் தந்து நிறைந்த முலையைத் தழீஇ மணத்தாற் பிரியாது, மெய்யாற் பிரிந்த வாதரங்கொண்ட அவாவின் பெருமையினால் நமது விளங்கிய மனைக்கு வந்தார். எ - று.

கந்தாரம் - ஓர் பண். கனிதல் - தித்தித்தல். கடி - விளக்கம். கொழுந்து - கொத்து அகலம் - ஆகுபெயர். தணத்தல் - பிரிதல். (கஎச)

தலைமகளைக் குறியிடத்துக் கொண்டுசேறல்.

(இது வெளிப்படை.)

மின்னே யயிலொடு மின்விளக் காவந்த வெற்பனைநாம்
பொன்னே யெதிர்கொளப் போதுகம் வாபுவி யேழினுக்கும்
தன்னேயம் வைத்தருள் சந்திர வாணன் றமிழ்ச்சிலம்பில்
நின்னே ரியன்மயில் கண்டுயி லுக நிழலகத்தே.

இ - ள். எழ்புவிக்கும் தன்னன்பைவைத் தாளப்பட்ட சந்திரவா ணன் தமிழ்ச்சிலம்பி லிருக்கப்பட்ட பொன்போன்றவளே! நின்னியலுக்கு நேராகிய மயில்கண்ணுறங்கும் புன்னாக நிழலகத்து ஒளிபொருந்திய வேலு டனே மின்னும் விளக்காக கங்குலில் வந்த வெற்பனை நாமெதிர்கொள் ளப் போதுகம் வா. எ - று.

மின் - ஒளி. எய்தல் - பொருந்துதல். அயில் - வேல். பொன் - ஆகுபெயர். நேயம் - அன்பு. தமிழ்ச்சிலம்பு - பொதியமலை. இயல் - சாயல். 'நின்னியல்' என மாறுக. (கஎரு)

குறியுய்த் தகறல்.

குறியுய்த் தகறல் எ - து. பாங்கி தலைமகளைக் குறியிடத்துச் செலுத்தித் தானகன்றுபோதல்.

மந்தார மன்னகை வாணன்றென் மாறை மயிலனையாய்
நந்தா வனப்பொய்கை நான்கொய்கு வேன்குழ லுனுங்கங்குல்
கொந்தார் தெரியனின் செங்கனி வாயொடுங் கொங்கையொடும்
பைந்தா மரையையுஞ் சேதாம் பலையும் பகைப்பித்ததே.

இ - ள். மந்தார தருப்போன்ற கையையுடைய வாணன் தென் மாறைநாட்டு மயில் போன்றவளே! குழலுக்கு நாளுங் கங்குலானது கொத்தார்ந்த மாலையணிந்த நின் செங்கனிவாயொடுங் கொங்கையொடுஞ் சேதாம்பலையையும் பைந்தாமரையையும் பகைக்கச் செய்த தாதலால் கேடில்லாத சோலையிடத்திருக்கும் பொய்கையிற்போய், நான் அப்போது களைக் கொய்வேன், கொய்துவருமளவும் இவ்விடத்து நிற்பாயாக. எ - று.

மந்தாரம் - பஞ்சதருவிலோர் தரு. நந்தா - கெடா. வனம் - சோலை. கொந்து - கொத்து. தெரியல் - மாலை. சேதாம்பல் - அரக்காம்பல்.

இவ்வாறு இரவுக்குறிக்கண் தலைவியைத் தமியளாய் நிறுத்திப் பாங்கி நீங்கில் இடையிருளில் அச்சமின்றி தலைவி நிற்பளோ வெனின், தான் பயின்ற இடமும் தன் னுயத்தோ டொக்கு மாதலானும், தலைவன் ஓர் புடை அருகு நிற்றலானும், பாங்கியும் அப்பால் பொய்கையில் நிற்றலானும் அச்சமின்றி நிற்பளென் றுணர்க. (௪௯)

வண்டுறை தாரோன் வந்தெதிர்ப் படுதல்.

(இது வெளிப்படை.)

முதிரா முலையிப் பனியந்த கார முனியவல்ல
கதிரா யிரமில்லை யேழ்பரித் தேரில்லைக் காவல்வெய்யோற்
கெதிராதல் சோமற் கியைவதன் றேநும்மில் யார்திறந்தார்
மதுரா புரித்தமிழ் தேர்வாணன் மாறை வனத்துவந்தே.

இ - ள். எஞ்ஞான்றும் முதிர்ந்து சாயாத முலையையுடையாய்! இந்தப் பனிபொருந்திய அந்தகாரமாகிய பூட்டைத் திறப்பதற்குத் திறவுகோலாகிய கதிராயிரமில்லை, திறப்பவனைக் கொண்டுவரும் எழ்பரியையுடைய தேரில்லை, திறக்குங் காவலையுடைய வெய்யோனுக்கெதிராய்வந்து திறத்தல் சோமற்குப் பொருவதன்றே யாதலானும், இல்லாகிய தாமரைமாளிகையை மதுராபுரித் தமிழை யாராய்ந்த வாணன் மாறை நாட்டிலிருக்கும் பொய்கை நீரில் வந்து திறந்தவர்யார்? எ - று.

அந்தகாரம் - இருள். பரி - குதிரை. வெய்யோன் - சூரியன். சோமன் - சந்திரன். இயல்வது - பொருந்துவது. வனம் - நீர். ‘முதிரா முலை’ என்றதற்கு ‘நும்மில்’ என்றது ஒருமைப்பன்மைமயக்கம். (கஎஎ)

பெருமகள் ஆற்றின அருமைநினைந்திரங்கல்.

பெருமகள் * * * திரங்கல் எ - து. தலைவி தலைவன் வரும் வழியின அருமையை நினைந்திரங்கல்.

செழியன் கயலைத் திசைவைத்த வாணன்றென் மாறையென்மேல்
கழியன் புடையநின் கால்கண்க ளாகக் கராம்பயிலும்
குழியன்றி யும்வெஞ் சுழிபொன்றும் யாறுங் குழீஇக்கொடிதாம்
வழியன்ப நீயெங்ங னேவந்த வாறிம் மழையிருளே

இ - ள். அன்பனே! பாண்டியனது கயற்கொடியைத் திசையெட்டினும் நிறுத்திய வாணனுட்டிலிருக்கின்ற என் மிகுந்த அன்புடைய நினது கால்களே கண்களாக, முதலைகள் நெருங்கும் குழிந்த மடுவல்லாமலும் வெவ்விய சுழிபொருந்தும் அருவியாறுங் கூடிக் கொடியதாம் வழியில் இம்மழைக்காலிருளில் நீ வந்தவாறெவ்வாறு? எ - று.

செழியன் - பாண்டியன். கயல் - ஆகுபெயர். கழி - மிகுதி. கால் கண்களாதல் இருட்செறிவால் அக்கண் நெறிசெல்லாதாகலான் காலறிவாற் நடவிவருதல். கராம் - முதலை. பயிலுதல் - நெருங்குதல். குழீஇ - கூடி. (கஎஅ)

புரவலன் தேற்றல்.

புரவலன் தேற்றல் எ - து. தலைவியைத் தலைவன் தேற்றல்.

வெய்யிலுக் தாவிந்த மென்மல ரன்னமும் விந்தைவெற்றி
மயிலும் பயில்புயன் வாணன்றென் மாறைநின் வாள்விழிபோல்
அயிலுங் குயின்மொழி நின்னிடை போன்மின்னு மாடளிகள்
பயிலுந் தொடைநின் குழல்போ லிருளைப் பருகினவே.

இ - ள். குயில்போன் மொழியாய்! வெயிலினாலே முறுக்கைத் தள்ளப்பட்ட தாமரை மலரிலிருக்குஞ் செல்வத்திருவும், விந்தையாகிய வெற்றித்திருவும், பழகிய புயத்தையுடையவனாகிய வாணன் மாறைநாட்டு நின் னொளியையுடைய விழியையொக்கும் என் கைவேலும், நின்னிடையையொக்கும் மின்னும், ஆடும் வண்டுகள் செறிந்த மாலை சூழ்ந்த நின் குழலையொக்கும் இருளைக் குடித்தன வாதலால் யான் அச்சமின்றி வந்தேன். எ - று.

உந்தல் - தள்ளுதல். அரவிந்தம் - மென்மலர். அன்னம் - செல்வத்திரு; விந்தை. வெற்றிமயில் - வெற்றித்திரு. பயிலுதல் - பழகுதல். அயில் - வேல். பயிலுதல் - செறிதல். பருகுதல் - குடித்தல். (கஎகூ)

புணர்தல்.

(இது வெளிப்படை.)

சுழிநீ ரலைகடற் றொல்லுல கேழினுந் தோற்றும் வண்மைக்
கழிநீடு மாடக மேருவின் மீதினுங் காவல்கொண்டு
வழிநீள் புகழ்கொண்ட வாணன்றென் மாறை வரையின்மலர்ப்
பொழினீழ லும்ப ரமுதனை யாளைப் புணர்ந்தனமே.

இ - ள். சுழிந்த நீரும் அக்கிரி லலையும்பொருந்திய கடல் சூழ்ந்த பழைய வுலகேழினும் பரக்குஞ் செல்வமிகுதி நீண்ட பொன்மேருவு மீதிலுங் காக்குந் தொழிலைக்கொண்டு, அத்தொழில் வழியே நீண்ட புகழைக்கொண்ட வாணன் தென்மாறைவெற்பிற் றோன்றிய மலர்ச்சோலை நீழலில் தேவாமிர்தம் போல்வாளை யாம் புணர்ந்தனம். எ - று.

யாம் - தோன்றா எழுவாய். 'சுழிநீரலை' என்புழி உம்மைத்தொகை. தொல்லுலகு - பழைய வுலகு. வண்மை - வளம். கழி - மிகுதி. ஆடக மேரு - பொன்மேரு. உம்பரமிர்தம் - தேவாமிர்தம். (க௮௦)

புகழ்தல்.

(இது வெளிப்படை.)

மண்ணார் பெரும்புகழ் வாணன்றென் மாறை வரைபயிலும்
தண்ணார முங்கமழ் சார்வருஞ் சாரலிற் சார்ந்துறையும்
பெண்ணா ரணங்கன்ன நின்முகந் தான்கண்ட பின்னுமுண்டோ
கண்ணார் தடங்களின் வாயொடுங் காத கமலங்களே.

இ - ள். நிலவுலகம் நிறைந்த பெரிய புகழுடைய வாணன் தென் மாறைவரையில் பயிலுந் தட்பமாய்ச் சந்தனமும் நாறுகின்ற பிறரொருவர் சார்தற்கரிய மலைச்சாரலிற் சார்ந்துறையும் ஆரணங்குபோன்ற பெண்ணே! நின் முகத்தைக்கண்ட பின்னும் இடமார்ந்த பொய்கைகளில் வாய்குவியாத கமலங்களுண்டோ! இல்லை. எ - று.

'நின் முகத்தை மதியமென்று கருதி வாயொடுங்காதகமலமுண்டோ' எனினும் அமையும். மண் - நிலவுலகம். ஆர்தல் - நிறைதல். ஆரம் - சந்தனம். தென்மாறைவரை - பொதியம். 'ஆரணங்கன்னபெண்' எனஇயையும். பெண்ண - அண்மைவிளி. கண் - இடம். ஒடுங்கல் - குவிதல்.

இறைமக ளிறைவனைக் குறிவரல் விலக்கல்.

(இது வெளிப்படை.)

சூரற் கதிர்முத்த வார்முலை யாவியின் சூழ்கனி
வாரற்க நீதஞ்சை வாணன்வெற் பாவய மாவழங்கும்
வேரற் கடிய கவலையி னூடு வெயிலவற்கும்
சாரற் கருமைய தாளிருள் கூருமெஞ் சாரலிலே.

இ - ள். தஞ்சைவாணன் வெற்பனே!' வயமாவாகிய சிங்கம் புலி யானை இவைகள் சஞ்சரிக்கும் வேரல் நெருங்கிய கடியவாகிய கவர்வழி யாய், உள்ளே வெயிலவன் கிரணங்கட்கும் சேர்தற் கருமையுடைத்தாத லால், எக்காலமும் இருள்மிகும் எஞ்சாரலிடத்து நகைத்தல் போன்ற கதிரையுடைய முத்தமுங் கச்சும் பொருந்திய முலையென்னும் வாவியில் முழுக நீ தனியே வாரற்க. எ - று.

மூரல் - நகை. கதிர் - கிரணம். 'முத்தம்வார்' என்புழி உம்மைத் தொகை. வார்முலை - கச்சிறுக்கியமுலை. ஆவி - வாவி. வயமா புலி, யானை, சிங்கம் மூன்றிற்கும் பொதுவாதலான் இம் மூன்றையுங் கூறப் பட்டது. வேரல் - மூங்கில். கவலை - கவர்வழி. வெயிலவன் - ஆகு பெயர். கூர் - மிகுதி. (கசுஉ)

இறைவியை இல்வயின் விடுத்தல்.

இறைவியை இல்வயின் விடுத்தல் எ - து. தலைவன் தலைவியை மனை யிற் செல்லெனவிடுத்தல்.

மல்லையம் போர்வென்ற வாணன்றென் மாறைநின் மாளிகையாம்
தொல்லையம் போருகந் தேடவுங் கூடுந் தொடித்தளிரால்
முல்லையம் போது முகையுங்கொய் யாது முகிழ்முலையாய்
சொல்லையம் பொற்பளிங் கிற்றலம் பாதஞ் சிவப்பிக்கவே.

இ - ள். மல்லை யென்னும் ஒரூரிடத்தில் போரைவென்ற வாணன் தென்மாறைநாட் டிருக்கின்ற முகைபோன்ற முலையாய்! நின் மாளிகை யாகிய பழமையுடைய தாமரையானது தேடவுமமையுமாதலால் தொடி செறிந்த தளிர்போன்ற கையினால் முல்லைப்போதுந் தனது முகையுங் கொய்யாது அழகிய பளிங்குத்தலத்தைப் பாதமானது சிவப்பேறச்செய்யச் செல்லக்கடவை. எ - று.

மல்லை - ஓரூர். 'தொடித்தளிர்' - ஆகுபெயர். அம் - சாரியை. அம் - அசைநிலை. செல் - செல்லக்கடவை. ஐ-சாரியை. பொன் - அழகு. 'தலம்' என்புழி இரண்டனுருபு தொக்கது. (கசுஙு)

இறைவியை யெய்திப் பாங்கி கையுறைகாட்டல்.

(இது வெளிப்படை.)

மூகையா யலராய் முலைக்குநின் வாய்க்கு முறைமுறையே
பகையா மூளரியுஞ் சேதாம்ப லுமிவை பைங்கழுநீர்
வகையார் தொடைபுனை வாணன்றென் மாறையின் மௌவலன்ன
நகையா யவையிவை நின்குழற் காமுல்லை நாண்மலரே.

இ - ள். பசிய கழுநீர் வகையார்ந்த மாலையணிந்த வாணன் தென் மாறைநாட்டின் மௌவல்போன்ற நகையினையுடையாய்! முகையாயல

ராய் முலைக்கும் நின்வாய்க்கும் நிரனிறையாய்ப் பகையான தன்மையையுடைய தாமரையும் செவ்வாம்பலும் இவை கண்டருள்; முல்லைகாண் மலராகிய இவையும் முன்காட்டியஅவையும் நின் குழற்குச் சூடுதற்காமென்று கொண்டுவந்தேன். எ - று.

முளரி - தாமரை. சேதாம்பல் - செவ்வாம்பல். கழுநீர் - குவளை. மௌவல் - முல்லை. இரவுக்காலமாதலால் தாமரையை முகையென்றும், ஆம்பலையும், முல்லையையும் மலர் என்றும் கூறியவாறென் றுணர்க. (கஅச)

இற்கொண் டேகல்.

இற்கொண் டேகல் எ - து. தலைவியைப் பாங்கி மனையிடத்திற்கூட்டிப் போதல்.

ஒல்கா விருண்மணந் தொல்கரும் போழ்தி னுணர்ந்துநம்மை
நல்கா வியல்பன்னை நாடினு நாடு நடந்தருணீ
மல்காவி சூழ்தஞ்சை வாணன்றென் மாறையின் வள்ளையின்மேல்
செல்காவி யன்ன விழித்திரு வேயின் றிருமனைக்கே.

இ - ள். நிறைந்த பொய்கை சூழ்ந்த தஞ்சைவாணன் தென்மாறையில் வள்ளையின்மேற் செல்லுங் காவிபோலக் காதின்மேற்செல்லும் விழியையுடைய திருவையொப்பவளே! நம்மை நல்கும் அவ்வியல்பினையுடைய அன்னை சுருங்காத இருளைப்பொருந்திச் சுருங்குதற்கரிய இராப்போதிற் றுயிலெழுந்து தேடினுந் தேடுபோதலினால், நின் றிருமனைக்கு நீ நடந்தருள்.

ஒல்கா - சுருங்கா. உணர்தல் - துயிலெழுதல். நல்கல் - பயத்தல். இயல் - சுட்டுநின்றது. மல்கல் - நிறைதல். ஆவி - பொய்கை. வள்ளை - வள்ளைக்கொடி. காவி - நீலம். (கஅரு)

பிற்சென் றிறைவனை வரவு விலக்கல்.

பிற்சென் *** விலக்கல் எ - து. பாங்கி தலைமகளை மனையிற் சேர்த்த பின்பு தலைமகன்பாற் சென்று இவ்விருளினில் நீவாரலென்று வரவு விலக்கிக் கூறுதல்.

வெம்போர் முருகென்ன வேல்வல னேந்தி வெறிநிங்ஙனே
வம்போர் நகரொல்லி வாரல்வெற் பாமரு வாவரசர்
தம்போர் கடந்த தடம்புய வாணன் றமிழ்த்தஞ்சைநாட்
டம்போ ருகமல்ல வோதிருக் கோயி லணங்கினுக்கே.

இ - ள். வெற்பனே! பகைவேந்தர்தம் போரைக்கடந்த வாணன் தமிழ்த்தஞ்சை நாட்டின்க ணுள்ள அணங்கு போல்வாட்குத் திருக்கோயில் அம்போருக மல்லவோ! ஆதலினால், வெம்போரில் முருகவேளென்று சொல்ல வேலை வலத்திலே யேந்திப் பயனின்றிப் புதுமை யாராயும் நகரிடத்து இராப்பொழுதில் இவ்விடத்தில் நீ வாரல். எ - று.

முருகு - முருகவேள். வலன் - வலப்பக்கம். வம்பு - புதுமை. ஓர்தல் - ஆராய்தல். எல்லை - இராப்போது. 'அல்லவோ' என்னும் ஓகாரம் எதிர்மறை. அம்போருகம் இராக்காலத்தில் கதவு திறவாதாதலால் தலைவி மனைவிட்டு வெளிவருதல் அரிதெனக் குறிப்பால் அறிவித்தவாறுணர்க. (௧௮௬)

பெருமகன்மயங்கல்

பெருமகன் மயங்கல் எ - து. பாங்கி இவ்வாறு இரவுக்குறி விலக்கிய சொற்கேட்டுத் தலைமகன் மயங்கிக் கூறல்.

வஞ்சங் கலந்த கலிவென்ற வாணன்றென் மாறைவெற்பில்
தஞ்சங் கலந்தசொற் றையலும் யானுந் தனித்தனியே
நெஞ்சங் கலந்த நிலைமையெல் லாங்கண்டு நீயமுதின்
நஞ்சங் கலந்தனை போதனை வார்குழ னன்னுதலே.

இ - ள். வார்ந்து அரும்பை முடித்த குழலையும், நல்ல நுதலையு முடையாய்! வஞ்சனை கலந்த கலிகாலத்தைவென்ற வாணன் தென்மாறை வெற்பில் பற்றுக்கோடாகக்கலந்த சொல்லையுடைய தையலும் யானுந் தனித்தனியே நெஞ்சங்கலந்த நிலைமையெல்லாங்கண்டு, நீயுண்ணு மமுதில் நஞ்சங் கலந்தாற்போலும் வாரலென்னுஞ் சொல்லைச் சொல்லினை. எ - று.

தஞ்சம் - பற்றுக்கோடு. போதனை - அரும்பு. வார்தல் - சீப்பிடுதல். ()

தோழி தலைமகள் துயர்கிளந்து விடுதல்.

தோழி தலைமகள் துயர்கிளந்து விடுதல் எ - து. தோழி தலைமகனுக்குத் தலைமகள் துயரைக் கூறி நீ வரைபோய்ச் சேர்ந்த செய்தி யாம் அறியும்படி குறிசெய்யென்று கூறிவிடுதல்.

முன்னா ரரவுந் தெரியா விருணெறி முன்னிதையும்
மின்னார் புனையிழை மின்னனை யாளுய்ய வேலின் வெம்போர்
மன்னார் களிறு திறைகொண்ட வாணன்றென் மாறையன்ன
நின்னா ரகம்புகுந் தாற்குறி காட்டு நெடுந்தகையே.

இ - ள். நெடுந்தகையே! முன்னே யூரப்பட்ட அரவுந் தெரியா விருள் செறிந்த நெறியென்றதனை நினைந்து தையும் ஒளியூர்ந்த அணியை யணியும் மின்போன்றவ ளுய்யும்பொருட்டு, வேலினால் வெய்ய போரிற் பகைவேந்த ரூரப்பட்ட களிற்றைத் திறையாகக்கொண்ட வாணன் தென்மாறைபோன்ற நின்னூருட் புகுந்தால், ஓரடையாளங் காட்டுவாயாக. எ - று.

'அரவும்' என்புழி உம்மை சிறப்பும்மை. முன்னி - நினைந்து. மின் - ஒளி. 'இழைபுனை' என இயையும். புனைதல் - அணிதல். இழை -

அணி: மன் - வேந்தன். குறி - அடையாளம். காட்டுதல் - கோடுகுறித்தல், சங்கு குறித்தல் முதலியன. (கஅச)

நிருமகட் புணர்ந்தவன் சேரல்.

(இது வெளிப்படை.)

இருங்குன் றனமதி லெம்பதிக் கேக லெளிதுசெம்மை
தருங்குங் குமமுலைத் தையனல் லாய்தஞ்சை வாணன்வெற்பில்
கருங்குஞ் சரவினம் வெண்சிங்க வேறஞ்சுங் கங்குலினெம்
மருங்குஞ் சுடர்விளக் காமட வார்குழை மாணிக்கமே.

இ - ள். சிவப்பு நிறத்தைத் தருங் குங்கும மணிந்த முலையையுடைய தைய னல்லாய்! தஞ்சைவாணன் வெற்பில் கரிய யானைக் கூட்டங்கள் வெண்சிங்க வேற்றை யஞ்சுங் கங்குலில் எட்டுத்திக்கும் மடவார தகுழையி லணிந்த மாணிக்கம் ஒளி பொருந்திய விளக் கேற்றினாற்போல வருமாத லால், பெரிய மலைபோலும் மதில்சூழ்ந்த எம்பதிக் கேக லெளிது: நீ கவ லற்க. எ - று.

எனவே,— தலைவி யென்னெஞ்சி லிருக்கின்ற ளாதலின் அவள் குழைமாணிக்க வொளியினல் இருள் நீங்குமென்றவாறாயிற்று.

இருமை - பெருமை. குஞ்சரம் - யானை. சுடர் - ஒளி. குழை - காதணி. 'சிங்கவேறு' என்புழி இரண்டனுருபு தொக்கது. (கஅரு)

இறையோ னிருட்குறி வேண்டலும், நெறியி னரிமை கூறுதலும், தலைமக னவனாட்டணியியல் வினுதலும், பாங்கி இறைவிக்கு இறையோன் குறியறி வுறுத்தலுமாகிய நான்கும் வேண்டற்குரியன. பாங்கி நெறியின தருமைகூறலும், இறைமகள் இறைவனைக் குறிவரல் விலக்கலும், பாங்கி இறைவனை வரவு விலக்கலுமாகிய மூன்றும் மறுத்தற்குரியன. பாங்கி யவனாட்டணி யியல் வினுதலும், அவர்க்குத் தன்னாட்டணி யியல் பாங்கி சாற்றலும், நேரிழை பாங்கியோடு நேர்ந்துரைத்தலுமாகிய மூன்றும் உடன் படற்குரியன. தலைமகள் நேர்ந்தமை பாங்கி தலைவர்க்குணர்த்தலும், குறி யிடை நிறீஇத் தாய்துயி லறிதலும், இறைவிக்கு இறைவன் வரவறி வுறுத் தலும், அவட்கொண்டு சேறலுமாகிய நான்குங் கூட்டற் குரியன. தலை மகன் தலைமகளை யெதிர்ப்படுதலும், தேர்தலும், புணர்தலுமாகிய நான்குங் கூட்டற்குரியன. தலைமகன் தலைமகளையெதிர்ப்படுதலும், தேற்றலும், புணர் தலுமாகிய மூன்றும் கூடற்குரியன. தலைமகள் புகழ்தலும், கையுறைகாட் டலுமாகிய இரண்டும் பாராட்டற்குரியன. தலைமகள் தலைவியை இல் வயின் விடுத்தலும், பாங்கி தலைமகளை இற்கொண்டேகலுமாகிய இரண் டும் பாங்கி கூட்டற்குரியன. நேராதிறைவி நெஞ்சொடுகிளத்தலும், தலை மகள் ஆற்றின தருமைநினைந் திரங்கலும், பெருமகன் மயங்கலும், தோழி

தலைமகள் துயர்கிளந்து விடுத்தனுமாகிய நான்கும் முயங்கற் குரியன. முயங்கல் - வருந்துதல். பாங்கி குறியுய்த்தகறலும், திருமகட் புணர்ந்தவன் சேறலுமாகிய இரண்டும் நீங்கற்குரியன.

இத்துணையும் ஏழாநாட் செய்தியென் றுணர்க.

இரவுக்குறி - முற்றும்.

இரவுக்குறி யிடையீடு.

அஃதாவது, எட்டாநாள் இரவுக்குறிக்கண் வந்த தலைமகன் அல்லகுறிப்பறிதலால் இடையீடு பட்டுப் போதல்.

* "அல்ல குறிவருந் தொழிற்கருமை யென்றாங்
கெல்லிக் குறையிடையீ டிருவகைத் தாகும்." — என்னுஞ் சூத்திரவிதியான் எல்லிக்குறை யிடையீடு இருவகைப்படும். அல்லகுறி எ - து. தலைவியால் நிகழ்த்தப்படுவன வாகிய புள்ளெழுப்பல் முதலியன. எனவே,— நீரிற் கல்லெறிதல், இளநீர்வீழ்த்தல் முதலியனவுங்கொள்க. வருந்தொழிற் கருமை எ - து. தலைமகன் வருகின்ற தொழிற்கருமை.

அல்லகுறி.

இறைவிக் கிறைவ யிறைவர்வா வுணர்த்தல்.

(இது வெளிப்படை.)

கயல்வென்ற வுண்கண்ணி காரண மேதுகொல் கைதையங்கான்
அயனின்ற புன்னையி னன்னமெ லாமட லாழியங்கைச்
சயமங்கை தன்பெரு மான்றஞ்சை வாணன் றரியலர்போல்
துயரம் பெருகி யிராவொரு போதுந் துயின்றிலவே.

இ - ள். கயலை வென்று மையுண்ட கண்ணாய்! போர்புரியுஞ் சக்கரத்தைத் தரித்த சயமங்கைக் கிறைவனாகிய தஞ்சைவாணன் தரியலர்போற் கைதையங்காட்டின் அயலிருக்கும் புன்னையி னன்னமெல்லாந் துயரம் பெருகி, இவ்விரவின்கண் ஒரு நாழிகையுந் துயின்றில, காரணம் யாதோ! தெரிந்திலன். எ - று.

கைதை - தாழை. புன்னை - புன்னாகம். அடல் - போர். சயமங்கை - வெற்றிமாது. போது - ஈண்டு நாழிகை. உம்மை - சிறப்பு. (கசுo)

---

* அகப்பொருள்விளக்கம், களவியல், சூ. ௬௩.

தான்குறி மருண்டமை தலைவியவட் குரைத்தல்.

தான்குறி * * * குரைத்தல் எ - து. தலைவி தானல்ல குறியிடத்து நின்று தலைவனைக் காணாமையால் மீண்டு விடியற்காலத்து வந்து பாங்கியுடன் கூறல்.

அல்லகுறிப்படுங் காரணமென்னை யெனின், தலைவன் முன்னைநாளிரவில் புன்னைமரத்தின் கீழ்நின்று அதன்மே லிருக்கும் மயில்களை யெழுப்ப, அக்குறியிடத்து வந்து நீங்கிய தலைவி மற்றநாள் குறிக்கு வருவளென்று தலைவன் வந்து நிற்க, தலைவன் வருங்கால் அணித்தும் அல்லது சேய்த்தும் அல்லதாய ஓர் புன்னை மரத்திருந்த அன்னங்கள் தற்செயலா யெழுந்து ஆரவாரிக்க, அது தோழியாலறிந்த தலைவி அவ்வன்னங்களெழுந்த புன்னைக்கீழ் வந்து நின்று போயினள். தலைவனும் மயிலிருக்கும் புன்னைக்கீழ் நின்று தலைவியைக் காணாய், இருபுன்னைக்கும் நடுவிருந்த தாழைமரங்களிலே யோர் மரத்தில் தான்வந்து போயதற் கடையாளமாகத் தானணிந்த மாலையை வைத்துப் போயநாளில் இருவரும் அல்ல குறிப்பட்ட காரணமென்றுணர்க.

பேசத் தகுவதொன் றன்றுகண் டாய்பிறி தோர்குறியை
நேசத் தவர்குறி யென்றுசென் றியான்குறி நின்றுவந்தேன்
வாசத் தமிழ்புனை தோளுடை யான்றஞ்சை வாணனொன்னார்
தேசத் தவருமெய் தாவெய்ய நோயெய்திச் சேயிழையே.

இ - ள். சேயிழையே! தலைவர் நிகழ்த்த நிகழ்ந்ததல்லாதாய்ப் பிறிதொன்றா னிகழ்ந்த அடையாளத்தை நேசத்தையுடைய தலைவர் நிகழ்த்திய அடையாளமாக வெண்ணிப்போய்க் குறியினின்றும் மணம்பொருந்திய தமிழ்மாலைபுனைந்த தோளுடையானாகிய தஞ்சைவாணன் பகைவர்தேசத்தினுள்ளோரும் எய்தாத கொடிய துன்பத்தை யெய்தி வந்தேன், அத்துன்பஞ் சொல்லத்தகுவதொன்றன்று. எ - று.

கண்டாய் - முன்னிலையசை. குறி - அடையாளம். நேசத்தவர் - அன்புடையவர். வாசம் - மணம். ஒன்னார் - பகைவர். (கசுக)

பாங்கி தலைமகன் தீங்கெடுத் தியம்பல்.

பாங்கி தலைமகன் தீங்கெடுத்தியம்பல் எ - து. பாங்கி தலைவன் பொல்லாங்கை யெடுத்துக் கூறல்.

வடியோ வெனுங்கண் மடந்தைநல் லாய்தஞ்சை வாணனை வந்
தடியோ மெனச்சென் றடையலர் போலயர் கின்றநின்கைத்
தொடியோட மென்பணைத் தோளிணை வாடுந் தொழில்புரிந்த
கொடியோர் துணிந்துசெய் தார்குறி யாத குறிநமக்கே.

பொய்யா தவர்தங் குறிபிழை யாரவர் பூண்டவன்பு
மெய்யாத றேறி யழுங்கன்மின் னேபுய வெற்பிரண்டால்
மையாழி வைய நிலையிட்ட வாணன்றென் மாறைவெற்பின்
உய்யான மென்கழு நீர்நறு மாலை யுடைத்தல்லவே.

இ - ள். புயமாகிய மலையிரண்டினால் கருங்கடல் சூழ்ந்த வுலகத்தை நிலைக்கச்செய்த வாணன் தென்மாறை வெற்பிடத்தி லிருக்கு மின்னே! இச் சோலையிலிருக்குங் கைதையானது மெல்லிய கழுநீர்மாலை யுடைத்தா யிராதே இங்ஙன முடைத்தா யிருத்தலால், அவர்தங் குறியும் பொய்த்துப் போகாது, அவரும் பிழைத்தல் செய்யார், அவர் நம்மிடத்திற் பூண்ட மெய்யாதலைத் தெளிந்து இரங்கலை. எ - று.

புயவெற் பிரண்டால் வையநிலையிடல் - புயவலியால் நிலவுலகத்தைத் தாங்கி நிலைக்கச்செய்தல். தம் - அவர்தம். பிழைத்தல் - தப்பல். வையம் - உலகம். உய்யானம் - ஆகுபெயர். (கக௬)

இறைவன்மேற் பாங்கி குறிபிழைப் பேற்றல்.

இறைவன்மேற் * * * பேற்றல் எ - து. ஒன்பதாநா ளிரவுக்குறிக்கு வந்த இறைவன்மேற் பாங்கி அல்லகுறிப்பட்ட குற்றமேற்றுக் கூறல்.

விம்மூர் துயர்க்கடல் வெள்ளத்துள் ளேயெம்மை வீழ்வித்துநீர்
எம்மூ ரகத்து வரலொழிந் தீரெதி ரேற்றதெவ்வர்
தம்மூரை முப்புர மாக்கிய வாணன் றமிழ்த்தஞ்சைபோல்
உம்மூர் வரத்துணிந் தேமன்ப கூறுமவ் வூரெமக்கே.

இ - ள். அன்பரோ! விம்முதல் நிகழப்பட்ட துன்பக் கடலாகிய வெள்ளத்துள் எங்களை வீழத்தள்ளி யெம்மூரிடத்து நீர் வருதலை யொழிந்தீராதலால், எதிராய்ப் போரேற்ற தெவ்வர்தம்மூரை முப்புரமாக வெரித்த வாணனது தமிழ்த்தஞ்சை போலும் வளமுடைய உம்மூரிடத்து வரத் துணிந்தோம், அவ்வூர் இத்திசையென்று எமக்கு அறியக்கூறும். எ - று.

அன்பர் - அண்மைவிளி. விம்முதல் - துன்பம் உள்ளடங்காது மேன் மேல் எற்றி யெற்றி வருதல். ஊர்தல் - செல்லுதல். எதிரேற்றல் - போரேற்றல். தெவ்வர் - பகைவர். முப்புரமாகுதல் - எரித்தல். (கக௭)

இறைவிமே லிறைவன் குறிபிழைப் பேற்றல்.

இறைவி * * * பேற்றல் எ - து. தலைவிமேல் அல்ல குறிப்பட்ட குற்றமேற்றிக் கூறுதல்.

துறந்தன ளாகியம் போருகந் தன்னையித் தொல்வரைமேல்
பிறந்தன ளாகும் பெருந்திரு மாதெனப் பேதையரில்
சிறந்தன ளாதலிற் செந்தமிழ் வாணன்றென் மாறையன்னாள்
மறந்தன ளாயினும் யாமொரு போது மறவலமே.

இ - ள். பெருந்திருமாது தாமரை மலரை நீக்கினவளாகி இந்தப் பழைய மலைமேல்வந்து பிறந்தன ளாகுமென்று உலகஞ்சொல்லப் பெண்களிற் சிறந்தனளாதலின், செந்தமிழ்வாணன் தென்மாறை போன்றவள் மறந்தனளாயினும், யாமொருபோதும் மறந்திலம். எ - று.

அம்போருகம் - தாமரை. வரை - மலை. என - என்று சொல்ல. பேதையர் - பெண்கள். போது - நாள். (கசஅ)

அவள் குறிமருண்டமை யவளவற் கியம்பல்.

அவள் * * * கியம்பல் எ - து. தலைவி குறிமயங்கியது பாங்கி தலைவற் குணர்த்தல்.

தனையா வரும்புக ழத்தரும் வாணன் றமிழ்த்தஞ்சைமான்
அனையா ளவள்குறி யாமிதென் றேநினைந் தல்லதொன்று
நினையா வருங்கங்கு னின்குறி யாவந்து நின்றதுநம்
வினையால் விளைந்ததென் றேவெறி தேயன்ப மீண்டனளே.

இ - ள். அன்பனே! தன்னை யாவரும் புகழக்கொடுக்கும் வாணன் தமிழ்த்தஞ்சை மான்போன்றவளாகிய அத்தலைவி இது குறியாமென்று நினைந்து வருங் கங்குலிடத்து நீ நினையாவல்லதொருகுறி நின்குறியாய் வந்து நேர்பட நின்றது, நாம் முன்செய்த தீவினையால் விளைந்ததென்று பயனின்றி மீண்டனள். எ - று.

'இதுகுறியாம்' எனவும், 'நினைந்துவருங் கங்குல்' எனவும், 'நினையா வல்லதொன்று' எனவும் மாறுக. கங்குல் - இரா. வெறிதே - பயனின்றியே. அன்ப என்பது அண்மைவிளி. (கசகூ)

அவன்மொழிக் கொடுமைசென் றவளவட் கியம்பல்.

அவன்மொழி * * * கியம்பல் எ - து. தலைவன் சொல்லிய கொடுமையைத் தோழி தலைமகட்குச் சொல்லல்.

பல்லியம் போலுரு மேறெங்கு மார்ப்பதும் பார்ப்பதின்றி
வல்லியம் போதகம் போர்பயில் கான்வந்து வாணன்றஞ்சை
அல்லியம் போருகை யன்னநின் கேளரு ளாசையினின்
றெல்லியம் போதுசென் றேனென்று கேள்வ ரியம்பினரே.

இ-ள். போர்புரிவோர் முரசுபோல் இடி யெவ்விடத்தும் ஆரவாரிப்ப தையுங் கருதுதலின்றிப் புலியும் யானையும் போர்நெருங்கிச்செய்யுங் காட்டில்வந்து, வாணன் தஞ்சைநகரி லுள்ளவர் அகவிதழையுடைய அம்போருகத்தை யுடையவளாகிய திருமகளை யொத்த நினது உறவுதரும் ஆசையாற் குறியிடத்துநின்று இராப்போதில் நீ வாராமையான் மீண்டு சென்றேனென்று கொண்கரியம்பினர். எ - று.

பல்லியம் - முரசு. உருமேறு - இடி. பார்ப்பது - கருதுவது. வல்லியம் - புலி. போதகம் - யானை. கான் - காடு. அல்லி - அகவிதழ். அம்போருகை - திருமகள். கேள் - உறவு. அருளாசை - தருமாசை. நின்று - குறியிடத்து நின்று. எல்லியம்போது-இராப்போது. கேள்வர் - கொண்கர்.

என்பிழைப் பன்றென்று இறைவி நேர்தல்.

என்பிழை * * * நேர்தல் எ - து. குறி பிழைத்தது என்பிழை யன்றென்று இறைவி நேர்ந்து கூறல்.

வியலூ ரெயிற்புற நொச்சியி னூழ்மலர் வீழ்தொறெண்ணி
மயலூர் மனத்தொடு வைகினன் யான்றஞ்சை வாணன்வெற்பர்
புயலூ ரிருட்கங்குல் வந்தவ மேநின்று போயினரொன்
றயலூர் நகைக்குமென் னேயென்ன பாவங்கொ லாக்கினவே.

இ - ள். அகலம்பரந்த மதிற்புறத்து நொச்சி மரத்தினது பழைய மலர் சரசரத்து வீழ்தோறும் வீழ்தோறும் தலைவர் வருகின்றாரென்னும் ஆசைசெல்லும் மனத்தோடு யானிருந்தேன் ; தஞ்சைவாணனது வெற்பிலுள்ளாராகிய தலைவர் புயல்கள் செல்லும் இருளில் வந்து பயனின்றியே நின்று மீண்டுபோயினரொன்று அயலூரறியில் நகைக்கு மாதலால், இவ்வாறாக்கிய தென்ன பாவமோ ! செய்யுமாறென்னே ! எ – று.

வியல் - அகலம். ஊர்தல் - பரத்தல். எயில் - மதில். ஊழ் மலர் - பழையமலர். மயல் – ஆசை. ஊர்தல் இரண்டும் செல்லுதல். என்னே என்பது இகழ்ச்சியான் வந்தது. 'அயலூர் நகைக்கும்' எனவே இகழ்ச்சி பிறந்து அவ்விகழ்ச்சிக்கண் 'என்னே' என்று இழிவுதோன்றியவாறுணர்க.

இத்துணையும் பகற்செய்தியேன் றுணர்க.

அல்லகுறி - முற்றும்.

வருந்தொழிற் கருமை.

தாய் துஞ்சாமை.

தாய்துஞ்சாமை எ - து. தாய் விழித்திருத்தல்.

ஆழிய கன்புவி யுள்ளன யாவு மடங்கிகள்ளென்
றாழி முடிந்தன வோங்கிருள் யாமத்து மோடையினும்
தாழியி னும்போ தலர்தஞ்சை வாணன் றரியலர்போல்
தோழிநம் மன்னைகண் ணேதுயில் கோட றுறந்தனவே.

இ - ள். தோழியே! கடல்சூழ்ந் தகன்ற புவியிலுள்ளன யாவு மடங்கி கள்ளென்னு மோசையோடே கூடி யுகமுடிவு காலம்போன்று இருள் வளரப்பட்ட யாமத்தும் ஓடையிடத்தும் தாழியிடத்தும் போதுக ளலருந் தஞ்சைவாணன் தரியலர்போல் நம்மன்னை கண்டுயில்கொள்ளுதலைத் துறந்தனள். எ - று.

ஆழி - கடல். கள்ளென்னு மோசை - அனுகரணவோசை. ஊழி - யுகம். யாமம் - இரவு. தாழி - சால். (உ0உ)

நாய் துஞ்சாமை.

நாய் துஞ்சாமை எ - து. தாய்துஞ்சிய பின் ஊரிலிருக்கும் நாய் துஞ்சாமை.

தண்ணெனன் புனல்வையை சூழ்தஞ்சை வாணன் றரியலர்போல்
பெண்ணெனன் பிறவியும் பேருடைத் தன்றிப் பெரும்பதிநங்
கண்ணெனன் பவர்வரக் கங்குலின் ஞாளிக் கணங்குரைத்துத்
துண்ணெனன் கடுங்குரல் வாயன்னை துஞ்சினுந் துஞ்சிலவே.

இ - ள். குளிரொன்னும் புனலையுடைய வைகைசூழ்ந்த தஞ்சைவாணன் தரியலர்போல் பெண்ணென்று சொல்லும் பிறவியுங் கீர்த்தியுடைத் தன்றிப் பெரும்பதியிடத்து நங் கண்ணென்று சொல்லப்பட்ட தலைவர் கங்குலில் வர நம் அன்னை துஞ்சினும், துண் என்று சொல்லும் கடிய குரலெழும் வாயையுடைய ஞாளிக்கூட்டங் குரைத்து அன்னை துஞ்சிலள்.

பாங்கி - முன்னிலை யெச்சம். தரியலர் - பகைவர். பேர் - கீர்த்தி. பேரும்பதி என்புழி ஏழனுருபு தொக்கது. ஞாளிக்கணம் - நாய்க்கூட்டம். 'துண்ணெனன் கடுங்குரல்வாய் ஞாளிக் கணம்' என இயையும். துணை என்பது அச்சக் குறிப்பு. துஞ்சினும் என்னும் உம்மை துஞ்சாத வரிதென் பது தோன்ற நின்றது. (உ0௩)

ஊர் துஞ்சாமை.

ஊர் துஞ்சாமை எ - து. நாய்துஞ்சினும் ஊரிலுள்ளார் துஞ்சா திருத்தல்; இடத்து நிகழ்பொருளின் தொழில் இடத்துமேல் நின்றது.

ஓங்கண்ணல் வெம்பக டுந்திவந் தோரை யுடன்றுதும்பைத்
தேங்கண்ணி சூடிச் செருவென்ற வாணன்றென் மாறைமின்னே
தாங்கண் ணனையர் தமைப்பிரிந் தோநந் தனிமைகண்டோ
நாங்கண் ணுறங்கினு மோவுறங் கார்கண் ணகரவரே.

இ - ள். உயர்ந்த பெருமையுடைய வெவ்விய யானைப்பகட்டை நடத்திவந்த பகைவரைச் சினந்து தும்பையென்னுந் தேன்பொருந்திய மாலையைச் சூடிப் போரைவென்ற வாணன் தென்மாறைநாட்டு மின்போன்றவளே! தாம் கண்போன்ற நாயகரைப் பிரிந்தோ! அன்றி நமது தனிமைகண்டோ! நான் கண்ணுறங்கினும் கண்ணுறங்கார் நகரவர். எ - று.

'வெம்பகடேர்ந்து வந்தாரொன்று முறங்கா ரிந்ந கரவர்' என்று பாடமும் ஓதுவாருமுளர். அண்ணல் - பெருமை. பகடு - யானை. உந்தல் - நடத்துதல். உடலுதல் - சினத்தல். போர்பொருவோர் தும்பைமாலை சூடுதல் புறப்பொரு ளிலக்கண வழக்கு. தேங்கண்ணி - தேன்பொருந்தியமாலை. செரு-போர். (௨௦௪)

காவலர் கடுகுதல்.

காவலர் கடுகுதல் எ - து. நகர் காப்போர் துடி யடித்துக்கொண்டு ஊர்சுற்றிக் கடுகி வருதல்.

புயற்கண் ணியதலைப் பூகமென் பாளைப் புதுமதுநீர்
வயற்கண் ணிறைதஞ்சை வாணன்றென் மாறையில் வஞ்சியன்னாள்
கயற்கண் ணிணையஞ்சி நீர்மல்கக் காவலர் கைப்பறையின்
செயற்கண் ணிணையல்ல வோபடு கின்றன திண்கடிப்பே.

இ - ள். முகிலைக்கிட்டிய தலையினையுடைய பூகத்தினது மெல்லிய பாளைப் புதிய மதுநீர் வயற்கண்ணுறையுந் தஞ்சைவாணன் தென்மாறையில் வஞ்சிக் கொம்புபோல்வாளது கயல்போன்ற கண்ணிணை யஞ்சி நீர் நிறைய வல்லவோ காவலரது கைப்பறையின் செயல்பொருந்திய கண்ணிணையின் திண்ணிய கடிப்புப்படுகின்றன. எ - று.

அண்ணிய - கிட்டிய. தலை - கமுகின துச்சி. பூகம் - கமுகு. பறை - துடி. கண்ணிணை - இருபக்கம். கடிப்பு - அடிக்குங் குறுங்கோல். ஓகாரம் - எதிர்மறை.

உணர்ப்போர் கேட்போ ரின்மையின் கவிக்கூற்றாய துறை; 'வருந்தொழிற்கருமை' கூறுங் கிளவி யேழினுள்ளும் ஆறு கிளவியும் தலைவி கூற்றாயக்கூறி இது கவிக்கூற்றாய்க் கூறிய தென்னையெனின், அயன்மாக்கள் தன்மையைக் கற்புடைமகளிர் கூறுவது இயல்பன்றாகலின், அவர் கூற்றொன்றும் ஒழுக்கம்பற்றிக் கவிக்கூற்றாய்க் கூறியதென் றுணர்க. இக்கூற்

தானன்றே 'ஊர்துஞ்சாமை' என்னுங் கிளவிச் செய்யுளில் 'தாழ்கண் ணனையர் தமைப்பிரிந்தோர்' வென ஆடவரை நீக்கி மடவார் செயலாய்க் கூறியதூஉமென் றுணர்க.

§ அடிக்கண் ணிருங் கழலரி கேசரி தெவ்வனுங்கக்
கொடிக்கண் ணிடியுரு மேந்தியதென்னவன் கூடலன்னாய்
வடிக்கண் ணிரண்டும் வளநகர்காக்கும்வை வேலினனர்
துடிக்கண் ணிரண்டுங் கங்குற் றலையொன் றுந் துயின்றிலவே.— என

இறையனார் அகப்பொருளுரையிற் காட்டியவதனானு முணர்க. (௨௦௫)

நிலவு வெளிப்படுதல்.

நிலவு வெளிப்படுதல் எ - து. தலைவன் வருதற் கிடையூறாய் நிலவு வெளிப்படுதல்.

தெண்பாற் கதிர்முத்த வெண்ணகை யாய்திகி ரிக்கிரிசூழ்
மண்பாற் புகழ்வைத்த வாணன்றென் மாறைநம் மன்னர்பொற்றேர்
பண்பாற் பரிக்கும் பரிவரு மாறென் பரந்தநிலா
வெண்பாற் கடலில்வை யம்பதி னாலு மிதக்கின்றவே.

இ - ள். தெளிவாய்ப் பால்போன்ற கதிரையுடைய முத்தம்போன்ற வெள்ளிய நகையையுடையாய்! பரந்த நிலவாகிய வெண்பாற்கடலி னுலகம் பதினாலு மிதவாநின்றன; ஆதலாற் சக்கரவாளகிரிசூழ்ந்த புவியிடத்துப் புகழைவைத்த வாணன் தென்மாறைநாட்டிலிருக்கும் நம்மன்னரது பொற்றேரைக் குணத்தினாற் பரிக்கும் பரிகள்வருமாறு எப்படி. எ - று.

திகிரிக்கிரி - சக்கரவாளம். பண்பு - குணம். பரித்தல் - சுமத்தல். பரி - குதிரை. வையமென்பது - தேர்க்கும்பேராதலின் முன் பதினாலு தேர்மீது நின்றனகண்டு நம் மன்னர் பொற்றேர்பரிக்கும் பரி வருமாறென்னென வோர் பொருடோன்றியது காண்க.

நிலவு வெளிப்படுதல் பதினாலு நாழிகைக்குமேற் கூறிய தென்னெனின், மதித்திங்களும் பிறைத்திங்களும் தம்மிற் கலக்கின்ற நாள் அப்பதினைந்தில் இது மதித்திங்களாதலால் இம் மதித்திங்கட்குப் பிற்கூறும் களவு இரவுக்குறிக்கு உரித்தாகலானும் மற்றைத்தினம் அட்டமிப் பக்கமாகலானுமென் றுணர்க. ‡ 'திங்க ளிரண்டி னகமென மொழிப' என்னும் இறையனார் பொருட்சூத்திர வுரையா னுணர்க. (௨௦௬)

கூகை குழறுதல்.

கூகை குழறுதல் எ - து. கூகை குழறக்கேட்ட தலைவி யஞ்சிக் கூறுதல்.

---

‡ இறையனார் அகப்பொருள், சூ. ௩௨.

நம்பே றுடைமை யிருக்கின்ற வாகடன் ஞாலத்துள்ளோர்
தம்பே றெனவந்த சந்திர வாணன் றரியலர்போல்
வம்பேறு கொங்கை மயிலிய னுமஞ்ச மன்றமராங்
கொம்பேறி நள்ளிருள் வாய்க்குழ றுநின்ற கூகைகளே.

இ - ள். கச்சேறியிருக்கப்பட்ட கொங்கையையுடைய மயில்போன்ற வியலையுடையாய் கடல்சூழ்ந்த வுலகத்துள்ளோர்தந் தவப்பேறாய் வந்த சந்திரவாணன் றரியலர்போல நாமஞ்சத்தக்கதாக வெளியிலிருக்கு மராமரத்தின் கிளையிலேறி இடையிருளின்கண்ணே கூகைகள் குழறுநின்றன; நமது நல்வினைப்பேறிருக்கின்றவாறு நன்றாயிருந்தது. எ - று.

பேறிரண்டும் - நல்வினைப்பேறு. வம்பு - கச்சு. மன்றம் - வெளி. நள்ளிருள் - இடையாமம். 'நன்றாயிருந்தது' என்னுஞ் சொல் வருவித்துரைக்கப்பட்டது. குறிப்புமொழியதனாற் றீதாயிருந்ததென்பது பெறப்பட்டது. மயிலியல் - அன்மொழித்தொகை; அண்மைவிளி. மராமரக்கொம்பு - ஆச்சாக்கொம்பு. (உ௦௭)

கோழி குரல்காட்டுதல்.

கோழி குரல்காட்டுதல் எ - து. இருவர்க்கு மிடையூறாய்க் கோழி குரல் காட்டுதல்.

மன்பதை யுய்ய வருந்தஞ்சை வாணன்றென் மாறைவெற்பர்
கொன்பதி வேல்வலங் கொண்டுவந் தாற்றங்கள் கோனடந்தான்
என்பது தேறி யிடையிரு ளூளை யெழுப்பும்வெம்முள்
பொன்பதி தாள்வளை வாய்ச்செய்ய சூட்டுவன் புள்ளினமே.

இ - ள். மக்கட்பரப்புய்யும்படி வரும் தஞ்சைவாணன் தென்மாறை வெற்பர் அச்சம்பதிந்த வேலை வலங்கையிற் கொண்டுவந்தால் வெவ்விய முள்ளையுடைய அழகுபொதிந்த தாளையும் வளைந்த வாயையும் செய்ய சூட்டையுமுடைய வலிப்புள்ளாகிய கோழியினம் தங்கள்கோனாகிய முருகவேள் நடந்துவந்தா னென்பதை அறிவில் தெளிந்து இடையிருளில் ஊளை யெழுப்பும். எ - று.

மன்பதை - மக்கட்பரப்பு. கொன் - அச்சம். தங்கள்கோன் - முருகவேள். பொன் - அழகு. (உ௦௮)

இரவுக்குறி யிடையீட்டில் வருந்தோழிற் கருமை ஏழிற்கும் ஒவ்வொன்றுக்கும் நந்நான்கு நாழிகையாகக் கோள்வது.

இரவுக்குறியிடையீடு

முற்றும்.

அஃதாவது, இவ்வாறு இடையீடுபெட்டதனாற் பத்தாநாள் தலைவி வரைதல் வேட்கையாற் கூறுவது.

* "அச்ச முவர்த்த லாற்றா மையென
மெச்சிய வரைதல் வேட்கைமூ வகைத்தே."—என்னுஞ் சூத்திர விதியால் வரைதல் வேட்கை மூவகைப்படும்.

தலைமகளைப் பாங்கி பருவரல் வினவல்.

(இது வெளிப்படை) பருவரல் - துன்பம்.

விண்டார் பதிகொண்ட வேற்படை வாணன் விரைகமழ்பூந்
தண்டா மரைமங்கை தங்கிய தஞ்சைநின் றாயர்தம்மோ
டுண்டா கியமுனி வோவன்றி யாயத்தொ டுற்றதுண்டோ
வண்டார் குழலிசொல் லாய்செல்வ தேதுன் மனத்திடையே.

இ - ள். பகைவருடைய பதியைக்கொண்ட வேற்படையையுடைய வாணனது மணங் கமழ்கின்ற பொலிவுவாய்ந்த தண்ணிய தாமரைமலரி லிருக்கும் வகைதங்கிய தஞ்சையி லிருக்கின்ற வண்டார் குழலினின்று ஆயர்தம்பா லுண்டாகிய முனிவோ? அல்லது நின்னுயக்கூட்டத்தாரால் வந்த இடையூறுண்டோ? உன் மனத்திடை நிகழ்கின்ற துன்பம் யாதோ? சொல்வாயாக. எ - று.

விண்டார் - பகைவர். தண்டாமரை மங்கை - திருமகள். வண்டார் குழலி - அன்மைவிளி. ஆல் உருபு இரண்டிடத்தும் ஒடுவாய்த்திரிந்தன.

† "மனத்தொடு வாய்மை மொழியிற் றவத்தொடு
தானஞ்செய் வாரிற் றலை."—என்றாற்போலக் கொள்க. (உ०கூ)

அருமறை செவிலி யறிந்தமை கூறல்.

அருமறை * * * கூறல் எ - து. தலைவி யரிய களவொழுக்கத்தைச் செவிலி யறிந்தமை பாங்கிக்குக் கூறல்.

மாணிக்க மென்கொம்ப ரென்சொல்லு கேன்றஞ்சை வாணன்வெற்
பேணிப் புணர்ந்து பிரிந்தபின் றோன்றலும் பேதைமுகம் [பர்
பாணித்த லின்றி மதிகண்டு நாணிய பங்கயம்போல்
நாணிக் கவிழ்ந்தத னாலறிந் தாளன்னை நங்களவே.

இ - ள். மெல்லிய மாணிக்கக் கொம்புபோல்வாய், யான் யாது சொல்லுவேன்! தஞ்சைவாணன் வெற்பராகிய தலைவர் நம்மை விரும்பிப்

---

* அகப்பொருள்விளக்கம், களவியல், சூ. சஎ.
† திருக்குறள், சே. உகூ௫.

புணர்ந்து பிரிந்துபோய் பின்னும் மனைக்கண் நீர்வேட்ட காரணம்போலத் தோன்றலும், அவனைக் கண்டவுடன் உன்னுடைய அறிவில்லா முகம் நீட்டிந்தலின்றி மதியைக்கண்டு நாணிய பங்கயம்போல நாணிக் கவிழ்ந்தபடியினாலே நங் களவை அன்னை யறிந்தாள். எ - று.

'மென்மாணிக்கம்' எனவியையும். கோம்பர்-அண்மைவிளி. பேணி - விரும்பி. பாணித்தல் - நீட்டித்தல். நாணல் - குவித்தல். களவில் தாயறிந்தாளென்று கூறல் வழுவெனல் வழுவன்று. 'என்னை,— இரவுக்குறியின் இடையீடு பட்டவதனால் வரைதல்வேட்கை தலைவிக்குப் பிறந்தது. பிறக்கவே பாங்கியொடு வருந்தொழிற்கருமை முதலிய கூறித் தலைவன் வரவை விலக்குவித்தலின் அருமறைச்செவிலி யறிந்ததாகக் கூறவே, தலைவன் விரைந்து வரைந்துகொள்வனென்று கருதித் தலைவி தானே கூறியதல்லது செவிலியறிந்தா ளல்லவென் றுணர்க. அன்றி, அறிந்தாளெனின் வரைவியலில் 'தலைவி வேற்றுமை செவிலி பாங்கியை வினாதல்' என்னும் கிளவிக்கு வழுவாம். அன்றியும், செவிலி வெறியாடுதல் முதலியன வற்றால் தலைவிக்குற்ற நோய் யாதோவென்று வினவினளென் றுண்டுக் கூறலின், ஈண்டறிந்துவைத்து அங்ஙனம் வினவில் வினாவழு வருமாதலானும் செவிலியறிந்தா ளல்லளென் றுணர்க. (௨௰)

தலைமகன் வருந்தொழிற் கருமை சாற்றல்.

தலைமகன் * * * சாற்றல் எ - து. தலைவி தலைமகன் வருந்தொழிற் கருமையைப் பாங்கிக்குக் கூறுதல்.

ஓவலில் வாயன்னை ஞாளியிவ் வூர்க ளுறங்கினுமூர்க்
காவலர் காய்வர் நிலாமதி காலுங் கடுங்குடிஞைச்
சேவலும் வாரண முந்தஞ்சை வாணனைச் சென்றிறைஞ்சா
மேவலர் போல்வெய்ய வாயடை யாவென் மெலிவறிந்தே.

இ - ள். ஒழிவில்லாத வாயையுடைய அன்னையும் ஞாளியும் இவ்வூருமுறங்கினும் ஊர்க்காவலர் அயலார்யாரென்று சினந்து திரிவார்கள். மதி நிலவைக் காலும் தஞ்சைவாணனைப்போய் வணங்காத பகைவரைப்போல என் மெலிவறிந்து கடிய கூகைச்சேவலும் வாரணமும் வாயடையா. எ - று.

பாங்கி - முன்னிலையெச்சம். ஓவல் - ஒழிதல். ஞாளி - நாய். காலுதல் - உமிழ்தல் 'மதிநிலா' வென இயையும். குடிஞை - கூகை. சேவல் - ஆண்புள். வாரணம் - கோழி. 'மெலிவறிந்து' என்பதனாற் காரணத்தைக் காரியமாக உபசரிக்கப்பட்டது. (௨௧)

தலைமக ளூர்க்குச் செலவொருப்படுதல்.

(இது வெளிப்படை).

நம்பா னலனுண்ட நம்பா தகர்தந் நகர்வினவித்
தம்பா லுடன்சென்று சார்குவ மோர்தரி யாரைவென்று
வம்பார் கழல்புனை வாணன்றென் மாறை வளரும்வஞ்சிக்
கொம்பா கியமருங் குற்கரும் பாமொழிக் கோமளமே.

இ - ள். தரியாரை வென்று வீரத்தால் கச்சார்ந்த கழலையணிந்த வாணன் தென்மாறை நாட்டு வளரும் வஞ்சிக்கொம்புபோன்ற மருங்குலையும் கரும்புபோன்ற மொழியினையு முடைய கோமளமே! நம்மிடத் தின்பத்தையுண்ட நம்முடைய பாதகரிருக்கும் நகரம் வினவி இருவரும் உடன் சென்று அவர் தம்பாற் சேர்குவம், நீ யஞ்சலை. எ - று.

தரியலர் - பகைவர். வம்பு - கச்சு. ஓகாரம் - அசைநிலை. (உகஉ)

பாங்கி யிறைவனைப் பழித்துரைத்தல்.

(இது வெளிப்படை.)

வறியார் புகழ்தஞ்சை வாணன்றென் மாறை மடந்தையன்னாள்
அறியா டியர்முன் னறிந்தவர் தாமத னுலழலின்
பொறியா ருயிர்வெம் பணிமா மணியும் புதையிருள்கூர்
நெறியா ரருள்பெற நாநடு நாளிடை நீந்துதுமே.

இ - ள். மிடியுடையார் புகழப்பட்ட தஞ்சைவாணனது தென்மாறை நாட்டு மடந்தைபோல்வாள் முன்னர் வேட்கை நோயை யறியாள், நாம் அறிந்தவதனால் நெருப்பின் பொறிபோன்ற உயிர்ப்பையுடைய வெய்ய நாகமீன்ற மாணிக்கத்தையும் புதைக்கப்பட்ட இருள் செறிந்த நெறியில் வரப்பட்டவரது அருளைப்பெற இடையாமமாகிய வெள்ளத் திடையே நீந்துவம். எ - று.

அவரது அருளைப் பெறவேண்டி நாமிறந்துபடாது துன்பப்படுவோ மெனவே, இயற்பழித்த லாயிற்று. வறியார் - மிடியார். உயிர் - உயிர்ப்பு. பணி - பாம்பு. மாமணி - மாணிக்கம். புதைத்தல் - மறைத்தல். நெறி - வழி. நடுநாள் - இடையாமம். நீந்தல் - துன்பமுறல். (உகங)

இறைவி இறையோன் றன்னைநேர்ந் தியற்பட மொழிதல்.

இறைவி * * * மொழிதல் எ - து. பாங்கி இயற் பழித்தது பொறாளாய்த் தலைவி இயற்பட மொழிதல்.

புணரா விரகமும் போகா விரவும் புணர்முலைமேல்
இணரார் பசப்பும் பிறவுமெல் லாமிருள் கூர்ந்தறல்போல்
வணரார் குழற்பிறை வாணுத லாய்தஞ்சை வாணன்வெற்பர்
உணரா திருப்பது வேறொன்று மல்லநம் மூழ்வினையே.

இ - ள். அறல்போல் இருள்கூர்ந்து கடைகுழன்றார்ந்த குழலையும் பிறைபோன்ற வாணுதலையுமுடையாய்! கூடாத விரகமும், கழியாத இரவும், நெருங்கிய முலைமேற் கொன்றைப் பூங்கொத்து வைத்தாற்போன்ற பசப்பும், ஒழிந்த துன்பங்களும் இவையெல்லாந் தஞ்சைவாணன் வெற்பர் அறியாதிருப்பது வேறொன்றுமல்ல; நம் ஊழ்வினையாதலால் அவர்மேற் குறையின்று. எ - று.

புணர்தல் - கூடுதல். புணர்தல் - நெருங்குதல். இணர் - பூங்கொத்து. பசப்புப் பொன்னிற மாதலால் கொன்றையென வருவித்தது. வணர் - கடை குழன்றல். உணர்தல் - அறிதல். ஊழ்வினை - பழவினை. (உகச)

கனவுநலி புரைத்தல்.

கனவுநலி புரைத்தல் எ - து. தலைவன் கனவிற்கூடினானாக, விழித்த பின்பு பொய்யாய்ப்போன துன்பத்தைப் பதினொன்றநாள் பாங்கியுடன் கூறல்.

இல்லா வருந்துயி லுண்டா யவரும்வந் தெய்திற்கங்குல்
பொல்லாத சேவற் கடுங்குர லார்த்துப் புவிபுரக்கும்
மல்லார் புயன்றமிழ் வாணன்றென் மாறை மருவலர்போல்
அல்லாமை நெஞ்சங் தடுமாற நல்லிடை யாக்கியதே.

இ - ள். பிரிவில்லா அருந்துயிலு முண்டாயவரும் வந்தெய்தின் கங்குலில் பொல்லாமையாகிய கோழி கொடிய குரலை யார்த்துப் புவியைக் காக்கும் மற்றொழிலார்ந்த புயத்தையுடைய தமிழைக்கற்ற வாணன் தென் மாறை நாட்டைச் சேராதார்போல, நன்கல்லாத என்னெஞ்சம் தடுமாற்ற மாக நல்ல இடையூறாக்கியது. எ - று.

தலைவன் பிரிந்தகாலை துயிலரிதாதலால் 'இல்லா வருந்துயில்' என்றும், இன்பத்தைக்கெடுத்து துயிலெழுப்பலால் 'பொல்லாத சேவல்' என்றும், மிகுந்த துன்பத்தைக் கொடுத்தலின் 'நல்லிடை' என்றும் கூறியவாறு. துயிலும் என்னும் எதிரது தழீஇய எச்சவும்மை விகாரத்தாற் றொக்கது.

பாங்கி முன்னிலையெச்சம்; இது 'கனவொடுமயங்கல்' என்னும் மெய்ப்பாடு. (உகரு)

கவினழி புரைத்தல்.

கவினழிபுரைத்தல் எ-து. விரகத்தால் தலைவி தன் நலனழிந்ததனைப் பாங்கியொடு கூறல்.

வாளினு நீள்விழி வாணுத லாய்தஞ்சை வாணன்றெவ்வின்
நாளினு நாளு நலந்தொலை வேனகை யாரயில்வேல்
வேளினு மேர்நல்ல வெற்பனு நீயுமென் மேனியினும்
தோளினு நோயறி யீரறி யாததென் றொல்வினையே.

இ - ள். வாளினும் நீண்ட விழியையும், ஒளிபொருந்திய நுதலையுமுடையாய்! தஞ்சைவாணனது பகையைப்போலச் சென்ற நாளினும் வருநாள் மிகவு நலனழிதலையுடைய எனது மேனியினுந் தோளினும் உற்ற வேட்கைநோயை ஒளியார்ந்த கூர் வேலையும், வேளினு மிக்க அழகையுமுடைய வெற்பனும் நீயும் அறிதல்செய்யீர்; நீரறிதல் செய்யாதது யாதெனின் என் பழவினை. எ - று.

'நலந்தொலை வேன்மேனியினும்' எனவும், 'நோய்நகையா ரயில்வேல்' எனவும், 'நீயுமறியீர்' எனவும் மாறுக. நோய் என்புழி இரண்டனுருபு தொக்கது. 'தோளினு நோயறிவீர்' என்று பாடமோதுவாருமுளர்.

தெவ்வு - பகை. நகை - ஒளி. அயில் - கூர்மை. தொல்வினை - பழவினை. நாளும் என்புழி உம்மை அசைநிலை. (௨௧௬)

தன்றுயர் தலைவர்க் குணர்த்தல் வேண்டல்.

தன்றுயர் * * * வேண்டல் எ-து. தலைவி தன் துயரைத் தலைவர்க்கு அறிவிக்கவேண்டுமென்று பாங்கியொடு கூறல்.

வரைப்பான் மதுரத் தமிழ்தெரி வாணன்றென் மாறைவையை
நுரைப்பான் முகந்தன்ன நுண்டுகி லாயிந்த நோயவர்க்கின்
றுரைப்பா ருளரோ லுயிரொய்த லாநமக் கூர்திரைசூழ்
தரைப்பால் வளரும் புகழெய்த லாமவர் தங்களுக்கே.

இ - ள். பொதியவரையிடத்துப் பிறந்த மதுரமாகிய தமிழை ஆராய்ந்த வாணன் தென்மாறையைச் சூழ்ந்துவரும் வையையாற்றின் நுரையையும் பாலையும் முகந்துகொண்டாலொத்த நுண்ணிய நூலாற்செய்த துகிலையுடையாய்! யான் வருந்தும் இந்த நோயைத் தலைவர்க்கு இன் றுரைப்பாருண்டாயின் நமக் குயிரொய்தலாம்; சொல்வார்க்குப் பயன் யாதெனின், அவர் தங்களுக்கு நடக்குந் திரையையுடைய கடல் சூழ்ந்த புவியினிடத்தில் புகழெய்தலாம். எ - று.

வரை - பொதியமலை. பால் - இடம். நுரைப்பால்-உம்மைத்தொகை. ஊர்திரை - வினைத்தொகை. திரை - ஆகுபெயர். தரா - நிலவுலகம். நுண்டுகில்- * "குண்டுசுனைபூத்த வண்டுபடுகண்ணி" என்றாற்போல ஒற்றுமை நயம்பற்றி நுண்ணிய நூலாற்செய்த துகிலென்று கொள்க. (௨௧௭)

துன்புறல் பாங்கி சொல்லெனச் சொல்லல்.

துன்புறல் * * * சொல்லல் எ - து. யான் துன்புறலைத் தலைவர்க்கு நீ சென்று சொல்லெனத் தலைவி கூறியதற்குத் தலைவியை நோக்கிப் பாங்கி சொல்லல்.

ஒல்லென வேயென் னுறுதுயர் தாமு முணரும்வண்ணம்
சொல்லென நீயிது சொல்லியென் பேறுன் றுயரமெல்லாம்
வல்லென வேகொண்ட கொங்கையர் வேடஞ்சை வாணன்வெற்பி
அல்லென வார்குழ லாயறி யாரல்ல ரன்பருமே. [ல்

இ - ள். விரைவினுள் இது விரைவென்ன? என்னுடைய மிக்க துயரைத் தலைவர்தாமும் உணரும்வண்ணம் என்னைச் சொல்லென்று நீ இது சொல்லிப் பெறும்பயன் யாது? சூதென்று சொல்ல ஒப்புமைக்கொண்ட கொங்கையர் வேளாகிய தஞ்சைவாணன் வெற்பில் இருளென்று சொல்லப் பொருந்திய குழலினை யுடையாய்! உன் துயரமெல்லாம் அன்பரும் அறியாரல்லர். எ - று.

ஒல்லெனல் - விரைவின்கண் வந்த சொல். உறுதுயர் - மிக்கதுயர். வல் - சூது. அல் - இருள். ஆர்ந்த - பொருந்திய. (௨௧௮)

அலர்பார்த்துற்ற வச்சக்கிளவி.

அலர்பார்த்துற்ற வச்சக்கிளவி எ-து. உற்றாருஞ் சொல்லும் அலரைக் கருதி அதனா லுற்ற அச்சத்தால் தலைமகள் கூறுஞ் சொல்.

மலருந் தொடைவஞ்சி வஞ்சக மாதரு மாரனும்வாய்
அலருந் தடங்கை யலருந்தொ டாநிற்ப வஞ்சிநெஞ்சம்
பலரும் புகழ்தஞ்சை வாணர் பிரானைப் பணியலர்போல்
புலரும் பெயருங்கண் ணீர்புல ராது புலரினுமே.

இ - ள். மலருமாலையுடைய வஞ்சிபோல்வாய்! ஊரிலுள்ள வஞ்சகமாயிருக்கப்பட்ட மாதரும் மாரனும் வாயலரும் பெரிய கையலருந் தொடா நிற்ப வஞ்சி; நெஞ்சமானது பலரும்புகழப்பெற்ற தஞ்சைவாணர்

* திருமுருகாற்றுப்படை, குன்றுதோறாடல்.

குலத்துச் சிறந்தானைப் பணியாதார்போலப் புலரும்; நெஞ்சு புலரினும் பெயரப்பட்ட கண்ணீரானது புலராது. எ - று.

வஞ்சி - அண்மைவிளி. மாரன் - மன்மதன். வாய்லர் - தூற்றுஞ் சொல். கையலர் - மாரன் அம்பாக எய்யுமலர். பெயர்தல் - நிலைவிட்டுப் பிரிதல். 'நெஞ்சம் புலரும்' எனவும்; 'புலரினும் பெயருங் கண்ணீர்' எனவும் இயையும். (உகூ)

ஆறுபார்த்துற்ற வச்சக்கிளவி.

ஆறுபார்த்துற்ற வச்சக்கிளவி எ - து. வழியைப்பார்த்து அவ்வழியேத்ததாற் சென்று அச்சத்தால் தலைவிகூறுஞ்சொல். பார்த்தல் - கருதல்.

அரியுங் கரியும் பொருநெறிக் கோர்துணை யாயவர்மேல்
சொரியுந் திவலை துடைக்கவென் றேகுழை தோய்ந்துநஞ்சும்
வரியும் பயில்கண்ணி வாணன்றென் மாறைநம் மன்னர்வந்து
பிரியும் பொழுதெல்லி வாய்வினை யேன்மனம் பின்செல்வதே.

இ - ள். குழையைத் தொட்டு நஞ்சும் வரியும் நெருங்குங் கண்ணாய்! வாணன் தென்மாறையிலிருக்கும் நம்மன்னர் இரவின்கண் வந்து பிரியும் பொழுது பாவியேன் மனம் அவரைப் பிரியாமற் றொடர்ந்துசெல்வது சிங்கமும் யானையும் பொருகின்ற வழிக்கொரு துணையாய் அவர்மேற் சொரியப்பட்ட மழைத்திவலையைத் துடைக்கவென்றோ! சொல்வாயாக. எ - று.

அரி - சிங்கம். கரி - யானை. கண்ணி - அண்மைவிளி. எல்லி - இரவு. நஞ்சு - விடம். வரி - செவ்வரி. பயில்கண் - நெருங்குங்கண்.

காம மிக்க கழிபடர் கிளவி.

காமமிக்க கழிபடர் கிளவி எ - து. வேட்கை மிக்குச் சிறப்பச் சிந்தித்துச் சொல்லுஞ் சொல்.

இக்கிளவிச் செய்யுட்குக் கருத்து — கடல், கானல், பொழில், விலங்கு, புள் இவற்றை நோக்கித் தலைவி இரங்கிக் கூறல்.

மாதுற்ற மேனி வரையுற்ற வில்லிதில் லைநகர்சூழ்
போதுற்ற பூம்பொழில் காள்கழி காளொழிற் புள்ளினங்காள்
ஏதுற் றழிதியென் னீர்மன்னு மீர்ந்துறை வர்க்கிவளோ
தீதுற்ற தென்னுக்கென் னீரிது வோநன்மை செப்புமினே.

¶ [இது பிறசெய்யுட்கவி.]

இக் கிளவிச்செய்யுள் ஆங்கு 'நெஞ்சழிதல்' என்னுங் கெய்ப்பாடென்றுணர்க. (உஉக)

---

* திருக்கோவையார், சே. களசு.

தன்னுட் கையா றெய்திடு கிளவி.

தன்னுட் கையா றெய்திடு கிளவி எ - து. தலைவி தன்னிடத்துத் துன்பத்தைப் பிறிதொன்றன்மே லிட்டுச் சொல்லுஞ் சொல்.

---

* விண்டலை யாவர்க்கும் வேந்தர்வண் டில்லைமெல் லங்கழிசூழ்
கண்டலை யேகரி யாக்கன்னிப் புன்னைக் கலந்தகள்வர்
கண்டிலை யேவரக் கங்குலெல் லாமங்குல் வாய்விளக்கும்
மண்டல மேபணி யர்ய்தமி யேற்கொரு வாசகமே.

¶ [இது பிறசெய்யுட் கவி.]

இக் கிளவிச் செய்யுள் எம் மெய்யாயினும் 'ஒப்புமைக் கோடல்' என்னும் மெய்ப்பாடென் றுணர்க. 'இன்பத்தை வெறுத்தல்' என்னுஞ் சூத்திரத்திற் காண்க. (உஉஉ)

நெறி விலக்குவித்தல்.

நெறிவிலக்குவித்தல் எ - து. தலைவி தலைவன் வரும்வழியை விலக்கெனப் பாங்கியொடு கூறல்.

ஏவற்கருத்தா, இயற்றுங் கருத்தா, கருவிகருத்தா, கருமகருத்தா என கருத்தா நால்வகையாய்க் கூறப்படும். அவற்றுள் பாங்கியை இயற்றுங் கருத்தாவாக்கி, தலைவியை ஏவுங்கருத்தாவாய்க் கூறலின், 'நெறிவிலக்கல்' என்னாது 'நெறிவிலக்குவித்தல்' எனக் கூறியதென் றுணர்க. இவ்வாறே மேல்வருங் குறிவிலக்குவித்தல் முதலாயினவற்றிற்குங் கொள்க.

ஈன்ற வினுமெனக் கன்புடை யாய்சென் றிரந்துகொண்டு
சான்றுண்மை யன்பர் தமக்குரை நீதஞ்சை காவலனைத்
தேன்றாழ் வரைத்தமிழ் சேர்த்திய வாணனைச் சேரலர்க்கும்
தோன்றா விருங்கங்கு னீவரு மாறெழி தோன்றலென்றே.

இ - ள். ஈன்றதாய் அன்பினும் என்னிடத் தன்பு மிக்குடையாய்! தஞ்சை காவலனைத் தேன்றாழ்ந்த பொதியமலையில் தமிழைச் சேர்த்திய வாணனைச் சேராத பகைவர்க்குந் தோன்றாத பெரிய கங்குலிடத்துத்

---

* தன்போற் சினத்துரு மேந்திய கோன்கன்னித் தாழ்துறைவாய்
பொன்போன் மலர்ப்புன்னைக் கானலு நோக்கிப் புலம்புகொண்ட
என்போ லிரவினெல் லாந்துயி லாதுநின் றேங்குதியால்
அன்போ டொருவர்க் கறிவழிந்தாயோ வலைகடலே. — இதனை இக் கிளவிக்குச்செய்யுளாக உரையாசிரியர் கொண்டிருக்கின்றனர். இறையனார் அகப்பொருள் சூ. கூ0 - ல் காண்க.

¶ திருக்கோவையார், செ. கஎஎ.

தோன்றலே! வரும் வழியினை யொழியென்று மாட்சிமையுடைய அன்பர்க்கு நீ சென்று வேண்டிக்கொண்டொழிப்பாயாக. எ - று.

உம்மை - சிறப்பும்மை. எனக்கு என்புழி வேற்றுமைமயக்கம். சான்றாண்மை - மாட்சிமை. தாழ்தல் - தங்குதல். வரை - புல்வரை. சேரலர் - பகைவர். உம்மை இழிவு சிறப்பு. தோன்றல் - அண்மைவிளி. (௨௨௯)

குறி விலக்குவித்தல்.

குறி விலக்குவித்தல் எ - து. தலைவி தலைவன் வரும் இரவுக்குறியை விலக்கெனப் பாங்கியொடு கூறல்.

வெற்றிய வாவிய வாணபி ரான்றஞ்சை வெற்பகத்தில்
பெற்றிய சோலைப் பிறங்கிருள் வாரன்மின் பேதையின்னும்
முற்றிய வேனற் படுகிள்ளை யோட்டு முறைமையளென்
றெற்றிய காதலி னிசைத் தாளன்னை யென்றுரையே.

இ - ள். தலைவி இன்னும் முற்றிய தினையினிடத்து வீழும் கிளியோட்டு முறைமையளென் றிரங்கிய காதலினால் அன்னை சொன்னாளாதலால், வெற்றியை விரும்பிய வாணர்பிரானது தஞ்சை வெற்பிடத்து இவ்விடையீடு படுவதாகிய சோலையிற் செறிந்த இருட்குறியிடத்து வாரா தொழிமினென்று அன்பர்க்கு நீ கூறுவாயாக. எ - று.

பாங்கி முன்னிலை அதிகாரப்பட்டு வருதலாற் கொள்க. **அன்பர்க்கு** என்பது அவாய் நிலையான் வந்தது. பிறங்கல் - செறிதல். ஏற்றல் - இரங்கல். இசைத்தல் - கூறுதல். **வாரன்மின்** - ஒருமை பன்மை மயக்கம். என்னை, —‡ "வயக்குறுமண்டிலம்" என்னும் பாலைக்கலியில் "இறத்திராலையமற் றிவணிலைமை கேட்டிமின்', என்றாற்போலக் கொள்க.

* "ஒருமை சுட்டிய பெயர்நிலைக் கிளவி
பன்மைக் காகு மிடனுமா ருண்டே."—என்னுஞ் சூத்திரவிதியானு முணர்க. (௨௨௬)

வெறி விலக்குவித்தல்.

வெறிவிலக்குவித்தல் எ - து. தலைவி தாய் வெறியாடுதல் கொண்டாளென்று தலைவர்க்குக் கூறி வரவு விலக்கெனப் பாங்கியொடு கூறல்.

---

‡ கலித்தொகை, பாலைக்கலி, செ. ௨௪.

* தொல்காப்பியம், சொல். எச்சவியல், சூ. ௯௫.

மின்னு திடித்தன வன்னைகொண் டாள்வெறி விந்தைமங்கை
மன்னுண்மை மன்னிய வாணன்றென் மாறை வரையில்வண்டியாழ்
என்னு வசுண மிறைகொள்ளு நாட னெக்கருளால
முன்னு ளருளிய நோய்தணிப் பானின்று மொய்குழலே.

இ - ள். மொய்குழலே! வெற்றி மங்கையா லரசாண்மை நிலைபெற்ற வாணன் தென்மாறையில் வண்டிசையை யாழிசையென் றெண்ணி அசுணப்புட்கள் தங்குநாடர் எனக்கருளினல் முன்னு ளருளிய நோயைத் தணிக்கும்பொருட்டாக, இன்று என்னை மின்னுதிடித்ததுபோலக் காரண மின்றி வெறியாட்டாளனை வினவ உட்கொண்டா ளென்று அன்பர்க் குரைத்து வரவு விலக்குவாயாக. எ - று.

வெறி - வெறியாட்டாளனை வினுதல். விந்தை மங்கை - வெற்றி மாது. மன்னுண்மை - அரசாண்மை. வண்டு, யாழ் இரண்டும் ஆகுபெயர். இறைகொள்ளுதல் - தங்குதல். நோய் - வேட்கைநோய். தணிப்பான் - வினையெச்சம். மொய்குழல் - வண்டுமொய்க்குங்குழல். (௨௨௫)

பிற விலக்குவித்தல்.

பிற விலக்குவித்தல் எ - து. தலைவி பிறாவரவைத் தலைவர்க்குக் கூறி வரவு விலக்கென பாங்கியொடு கூறல்.

பொருபான் மதியினைப் போன்மருப் பியானையிற் பொன்னொ டின்
தருபான் மொழிவஞ்சி சாரவந் தார்தஞ்சை வாணன்வெற்பின் [பம்
ஒருபா னொதுமல ரென்னவெந் தீயுலை யுற்றசெவ்வேல்
இருபான் மருங்கினுங் கொண் டெறிந் தாலொத்த தென்செவிக்கே.

இ - ள். இன்பத்தைக் கொடுக்கும் பால்போலு மொழியையுடைய வஞ்சிக்கொம்புபோல்வாய்! தஞ்சைவாணன் வெற்பில் பெறப்பட்டவெண் மதியை யொக்கும் மருப்பையுடைய யானையின்மேல் பொன்னொடு ஓரிடத் தயலார் சாரவந்தாரென்று சொல்ல, அச்சொல் என் செவிக்கு வெய்ய தீயுலையிற் பழுக்கக்காய்ந்த செவ்வேலை இரண்டு பக்கத்திடத்துங்கொண் டெறிந்தாலொத்ததென்று என் அன்பர்க்குக் கூறி அவர் வரவு விலக்குவாயாக. எ - று.

நொதுமலர் - அயலார். பால் - வெண்மை, பால் - பால், பால் - இடம், பால் - பக்கம் முறையே காண்க. (௨௨௬)

குரவரை வரைவெதிர் கொள்ளுவித்தல்.

குரவரை வரைவெதிர் கொள்ளுவித்தல் எ - து. பெரியோரை வரவு கூறி[illegible] ர நமரெதிர்கோடலைச் செய்யென்று தலைவி பாங்கியொடு கூறல்.

தற்பழி யாமலுஞ் சந்திர வாணன் றமிழ்த்தஞ்சைநங்
கற்பழி யாமலுங் காரணமாகக் கயல் விழிநின்
சொற்பழி யார்நமர் சொல்லுவல் லேசென்று சொல்லலையேல்
இற்பழி யாம்வழி யாநம தாருயிர்க் கேதமுமே.

இ - ள். கயல்போன்ற விழியினையுடையாய்! சந்திரவாணன்தமிழ்ச் சிலம்பில் தலைவன் தன்னைப் பழியாமலும், நமது கற்பழியாமலும், இவ்விரண்டுங் காரணமாக வல்லேசென்று பெரியோரா ம்ணமொழிந்து வரவும், நமரெதிர் கொள்ளவும் தலைவர்க்கும் நமர்க்கும் சொல்லு; நீ சொல்லியக்கால் நமர் நின் சொல்லைப் பழியார்; நீ சொல்லலையேல் நம் மனைக்குப் பழியாம்; நமதாருயிர்க்கு ஏதம் வருவதற்கு வழியுமாம். எ - று.

கயல் விழி - அன்மொழித்தொகை. இல் - ஈண்டுக்குலம். ஏதம் - குற்றம். பிறர் வரைவு நேரின் உயிர்போய்விடு மாதலானும், 'உயிர்க்கேதம்' என்று கூறியவாறு. 'வெறிவிலக்குவித்தல்' முதலிய மூன்று கவியுள்ளும் தலைவர்க்குக் கூறென்று கூறவில்லை யெனின், 'விலக்குவித்தல்' 'கொள்ளுவித்தல்' எனத் தலைவி ஏவலாய்ப் பாங்கி செயலாய்க் கூறியதனானும், வரைவு கடாவினும் இக்கிளவிகளின் பொருள்படத் தலைவற்குக் கூறுதலானும், அதிகாரப்பட்டு வருதலானும் தலைவர்க்குக் கூறென்று கூறியவாறாயிற்று.

‡ "பருவரல் வினவிய பாங்கிக் கிறைவி
அருமறை செவிலி யறிந்தமை கூறலுந்
தலைமகன் வருந்தொழிற் கருமை சாற்றலும்"—ஆக இரண்டும்,
"அலர்பார்த் துற்ற வச்சக் கிளவியும்
ஆறுபார்த் துற்ற வச்சக் கிளவியும்"—ஆக விரண்டும், வெறிவிலக்குவித்தல் முதலியநான்கும் ஆகிய எட்டும் அச்சத்திற்குரியன.

"பாங்கி இறைவனைப் பழித்தலுந்
துன்புறல் பாங்கி சொல்லெனச் சொல்லலும்" —ஆகிய இரண்டும் உவர்த்தற் குரியன.

"தலைமக னூர்க்குச் செலவொருப் படுதலும்
பாங்கி யிறைவனைப் பழித்தலும் பூங்கொடி
இறையோன் றன்னைநேர்ந் தியற்பட மொழிதலும்
கனவுநலி புரைத்தலுங் கவினழி புரைத்தலுந்
தன்றுயர் தலைவர்க் குணர்த்தல் வேண்டலும்

‡ அகப்பொருள்விளக்கம், களவியல், சூ. சஅ.

காம மிக்க கழிபடர் கிளவியும்
தன்னுட் கையா றெய்திடு கிளவியுங்
குரவரை வரைவெதிர் கொள்ளுவித்தலும்" — ஆகிய எட்டும்
ஆற்றாமைக் குரியன. (௨௨௧)

வரைதல் வேட்கை
முற்றும்.

வரைவுகடாதல்.

அஃதாவது, பாங்கி தலைவனொடு வரைவுகூறி வினாதல்.

‡ "பொய்த்தன் மறுத்தல் கழறன் மெய்த்தலென்
றொருநால் வகைத்தே வரைவுக டாதல்."— என்னுஞ் சூத்திரவிதியால் வரைவுகடாதல் நான்கு வகைப்படும்.

வினவிய செவிலிக்கு மறைத்தமை விளம்பல்.

வினவிய * * * விளம்பல் எ - து. முன் வரைதல் வேட்கையில் தலைவி அருமறை செவிலி யறிந்தமை கூறியவதனைத் தோழி தன்னை செவிலி வினவியதாகவும், அதற்குத் தான் மறைத்துக் கூறியதாகவும் தலைவற்குக் கூறுதல். இக்கிளவிமுதல் 'கவினழி புரைத்தல்' ஈறாகக் கூறிய கிளவிகள் பலவற்றுள்ளும் குறிப்பினானும் வெளிப்படையானும் வரைவு கடாவியவாறு கண்டுகொள்க.

தளரா விளமுலை தாங்குகில் லாது தளரிடைகண்
வளராத தென்கங்குல் வாரா யெனத்தஞ்சை வாணன்வெற்பா
விளரார் திருநுத லன்னைக்கோர் மாற்றம் விளம்பியுய்ந்தேன்
உளரா மவர்வலை யுட்பட்டு வாழ்வ துணர்ந்தருளே.

இ - ள். தஞ்சைவாணன் வெற்பனே! செவிலி என்னை ஈங்கு வாரா யென அருகழைத்து எஞ்ஞான்றும் இறுகிய தன்மை தளராத இளமுலைகளைத் தாங்கமாட்டாது தளர்ந்த இடையினையுடையாள் கங்குலின்கண் துயில்கொள்ளாதது என்னென்று வினவ, வெளுப்பார்ந்த திரு நுதலையுடைய அன்னைக்கு ஒருசொல் மறைத்துச் சொல்லி உய்ந்தேன்; எமக்குள்ளாராகிய தாய்மார் வலையு ளகப்பட்டு யாங்கள் உயிர்வாழ்தல் உணர்ந்தருள்வாயாக எ - று.

‡ அகப்பொருள்விளக்கம், களவியல், சூ. ௪௬.

தளரிடை - அன்மொழித்தொகை. கண்வளர்தல்-துயிலுதல். கங்குல்-இரவு. விளரார்தல்-மகட்குத் துயில் வாராமையால் யாதுநோயோவென்று துன்பத்தால் இருந்தல் வெளுத்தல். ஓர் மாற்றம் - தலைவி துயிலிடைக் கனவுகண்டு வெருவி யெழுந்தாள், அவ்வச்சத்தினால் துயில் வாராதிருந்தாளென்னு மாற்றம். யான் இங்ஙனம் மறைத்துக் கூறுவிடின் என்னுயிர்க்கு ஏதஞ்செய்வளென்பது தோன்ற 'உய்ந்தேன்' என்று கூறியவாறு.

எனவே,—குறிப்பால் வரைவுகடாதலாயிற்று. தாங்கி நில்லாதென்று பாடமோதி, தளரிடைக்குத் துவளுமிடை யென்று பொருளுரைப்பாருமுளர். (௨௨அ)

அலரறி வுறுத்தல்.

அலரறிவுறுத்தல் எ - து. ஊரில் தலைவியைத் தூற்றும் அலர்விரிந்ததென்று தலைவனுக் கறிவுறுத்தல்.

மணிவரை மாளிகை மாறை வரோதயன் வாணன் வெற்பா
பணிமொழி யாளென்னுங் கொள்கொம்பு மூடிப் படர்ந்தயலார்
அணிமனை தோறுங் கொழுந்துவிட் டம்ப லரும்பிமண்மேல்
தணிவில தாகவிப் போதலர் பூத்தது நண்ணளியே.

இ - ள். மணிவரைபோன்ற மாளிகையை யுடைய மாறை வரோதயனாகிய வாணனது வெற்பிலுள்ளவனே! நினது தண்ணளியாகிய வல்லி தலைவியென்னுங் கொள்கொம்பை மூடிப்படர்ந்து, பக்கத் தழகிய மனைதோறும் கொழுந்துவிட்டு, அம்பலென்னும் அரும்பை யரும்பி, மண்மேல் தணிவில்லாததாக இப்போது அலரென்னும் பூவைப் பூத்தது. எ - று.

மணிவரை - மாணிக்கமலை. பணிமொழி - மெல்லிய மொழி. கொள்கொம்பு - கொடிபடரக் கொள்ளுங்கொம்பு. அம்பல் - முகிழ்முகிழ்த்தல். அலர்விரிதல் - முகிழ முகிழ்த்தல், மனையோரறிதல். முகிழ் முகிழ்த்தல் - அயன்மனை யறிதல், அவர்சேரியறிதல் ; முகிழ முகிழ்த்தல் - சேரியறிதல், அயலயற்சேரி யறிதல். என்னை, — *"அம்பலு மலருங்களவு" என்னும் இறையனார் அகப்பொருட்சூத்திர வுரையிற் கண்டுகொள்க. இச் செய்யுள் 'இயைபுருவகம்' எனக்கொள்க. (௨௨௯)

தாயறி வுறுத்தல்.

தாயறிவுறுத்தல் எ - து. இக்களவைத் தாயறிந்தாளென்று தலைவற்குக் கூறுதல்.

---

* இறையனார் அகப்பொருள், சூ. ௨௨.

திரையிற் பவளம் வடவா முகத்தெழூஉ தீக்கொழுந்தின்
கரையிற் படருங் கடற்றுறை நாட கயற்கொடிபொன்
வரையிற் றிகழ்வித்த வாணன்றென் மாறை மலர்ந்தமௌவல்
விரையிற் களவையெல் லாமறிந் தாளன்னை மெய்யுறவே.

இ - ள், பவளக்கொடி திரையால் வடவாமுகக் கனலி லெழுங் கொழுந்துபோலக் கரையிலே படருங் கடற்றுறைநாடனே! கயற்கொடியைப்பொன்மலையில் விளக்குவித்த வாணன் தென்மாறை நாட்டின் தலைவிக்குச் சூட்டிய முல்லைமாலை மணத்தினாலே அன்னை களவையெல்லாம் உள்ளபடி யறிந்தாள். எ - று.

எனவே,—களவொழுக்கத்தில் ஒழுகற்பாலை யல்லையென்று கூறியதாயிற்று. திரை - அலை. இன் இரண்டும் - மூன்றனுருபு. என்னை,—

* "இன்னா னேது வீங்கென வரூஉ
மன்ன பிறவு மதன்பால வென்மனார்." — என்னுஞ் சூத்திரவிதியா னுணர்க. கொழுந்தின் - ஐந்தாமுருபு உவமப் பொருளின்கண் வந்தது. பொன்வரை - மகாமேரு. திகழ்வித்தல் - விளக்குவித்தல். மௌவல் - முல்லை. விரை - மணம். மெய்யுற - உள்ளபடி. (உகo)

வெறியச்சுறுத்தல்.

வெறியச்சுறுத்தல் எ - து. அன்னை வெறியாட்டாளனை வினாதல் உட்கொண்டாளென்று தலைவனுக்கு அச்சமுறுத்திக்கூறல்.

மையுற்ற நீலக்கண் மாமங்கை கோன்றஞ்சை வாணன்வெற்பில்
கெய்யுற்ற வேலன்ப நீதணி யாமையி னெஞ்சினுள்ளே
ஐயுற் றயர்வுற்றெம் மன்னையு மாயுமென் னாரணங்கின்
மெய்யுற்ற நோய்தணிப் பான்வெறி யாடல் விரும்பினரே.

இ - ள். மை யெழுதிய நீலமலர்போன்ற கண்ணையுடைய திருமகட்குக் கணவனாகிய தஞ்சை வாணன் வெற்பில் நெய் தடவிய வேலையுடைய அன்பனே! நீ தலைவிக்குக் கொடுத்த காம வேட்கையாகிய நோயைத்தணியச்செய்யாமையான் அன்னையும் யாயும் எங்கோயோவென்று ஐயப்பட்டு அயற்சி யடைந்து, என் ஆரணங்கு போல்வாளது மெய்யுற்ற நோயைத் தணிக்கும்பொருட்டு வெறியாட்டாளனை வினாதல் விரும்பினர். எ - று.

எனவே,— வெறியாட்டாளனை வினாதற்கு முன்னமே நீ விரைந்து வரைந்துகொள்வா யென்பது குறிப்பால் தோன்றிற்று.

---

*தொல். சொல். வேற்றுமையியல், சூ. கந.

மாமங்கை - திருமகள். தணித்தல் - ஆறச்செய்தல். அயர்தல் - கவற்சி. அன்னை - செவிலி. ஆய் - நற்றாய். ஆரணங்கு - அன்மொழித் தொகை. தணிப்பான் - வினையெச்சம். (உகூ)

பிறர்வரை வுணர்த்தல்.

பிறர்வரை வுணர்த்தல் எ - து. பிறர் வரைவு கூறிவந்த தலைவற் கறிவித்தல்.

வெடிக்கின்ற விப்பியு ணித்திலம் பைத்தலை வெம்பகுவாய்த்
துடிக்கின்ற திங்களிற் றோன்றுந் துறைவசெஞ் சொற்புலவோர்
வடிக்கின்ற முத்தமிழ் வாணன்றென் மாறையெம் மான்மருங்கை
யொடிக்கின்ற கொங்கைகண் டாலெவர் நெஞ்சுரு காதவரே.

இ - ள். வாய் விள்ளும் இப்பியிற் பாதியுள்ளும் பாதி வெளியுமாய்த் தோன்றும் நித்திலம் வெய்ய வகிர்ந்த வாயிடத்துத் துடிக்கின்ற திங்களைப் போலத் தோன்றும் நீர்த்துறைவனே! செவ்விய சொல்லையுடைய புலவோர் ஆராய்ந்து குற்ற நீங்கித் தெளிந்த தமிழைக் கற்ற வாணன் தென் மாறை நாட்டிலிருக்கும் எங்கள் மான்போன்ற தலைவியது இடையை யொடிக்கின்ற கொங்கையைக் கண்டால் நெஞ்சுருகாதார் யார். எ - று.

வெடித்தல் - வாய்விள்ளுதல். இப்பி - முத்திப்பி. நித்திலம் - முத்து. பைந்தலை - ஆகுபெயர். பகுவாய் - வகிர்வாய். துடித்தல் - நடுங்குதல். உவமப் பொருட்குத் துடிப்பு யாதெனின், ஒளியால் துடித்தல்போலத் தோன்றல். வடித்தல் - ஆராய்ந்து குற்றம் நீக்கித் தெளிதல். முத்தமிழ் - இயல் இசை நாடகம். மான் - ஆகுபெயர். மருங்கு - இடை. உருதல் - உதிர்தல். 'வெடிக்கின்ற விப்பியு ணித்திலம் பைத்தலை வெம்பகுவாய்த் துடிக்கின்ற திங்களிற் றோன்றுந் துறைவ' என்றது இறைச்சியென்க. ‡"இறைச்சிதானே பொருட்புறத்ததுவே" என்னுஞ் சூத்திரத்தா னுணர்க.

வரைவெதிர் வுணர்த்தல்.

வரைவெதிர் வுணர்த்தல் எ - து. பாங்கி தலைவனைநோக்கி நீ வரைவு கூறி, எங்கள் நகர்க்கு வந்தாயாகில் எமர் எதிர்கொண்டு வருவரெனக் கூறுதல்.

குருதிகண் டாலன்ன காந்தளஞ் சாரற் குறிவெறிதே
வருதிகண் டாய்தஞ்சை வாணன்வெற் பாவெங்கண் மாநகர்நீ
சுருதிகண் டாரொடுந் தோன்றிலெங் கேளிர்நின் சொல்லிகவார்
பருதிகண் டான்மல ராதொழி யாகயப் பங்கயமே.

இ - ள். தஞ்சைவாணன் வெற்பனே! குருதிகண்டாலொத்த காந்தட் பூவலர்ந்த எங்கள் சாரற் குறியிடத்தில் பயனின்றியே வருவாய்; எங்கள் மாநகரில் நீ வேதம் வல்ல அந்தணரொடும் வந்து தோன்றி வரைவு

‡ தொல். பொருள். பொருளியல், சூ. ஙரு.

கூறினையேல் எங்கள் சுற்றத்தார் நின் சொல்லைக் கடவார். அஃதென்னெனின், ஞாயிற்றைக் கண்டால் குளத்திலிருக்கும் தாமரை அலராதொழியாது, ஆதலால் அந்தணரை முன்னிட்டுக்கொண்டு வருவாயாக.

எனவே,—வெளிப்படையால் வரைவு கடாவியது. குருதி - இரத்தம். அம் - சாரியை. தூறி - ஏழாம்வேற்றுமைத்தொகை. கண்டாய் - முன்னிலையசைச்சொல். சுருதி - வேதம். கண்டார் - முடிவுகண்டார். இகத்தல் - கடத்தல். 'நின் சொல் இகழார்' என்று பாடமோதுவாருமுளர். அலராதொழியாதென்பது அலருமென்னும் பொருடந்து நின்றது. (உகூக)

வரையுநா ளுணர்த்தல்.

வரையுநா ளுணர்த்தல் எ - து. மணஞ்செய்கின்ற நாளையறிவித்தல்.

அலகம் பனகண் ணிவள்கொங்கை மென்சுணங் காகிவண்டு
பலகம் பலைசெய்யப் பூத்தன வேங்கைப் பனிவரைமேல்
திலகம் பதித்தெனச் சேல்வைத்த வாணன்றென் மாறைமன்னன்
உலகம் பயில்புகழ் போற்சிலம் பாமதி யூர்கொண்டதே.

இ - ள். சிலம்பனே! கூர்மைபொருந்திய அம்புபோன்ற கண்ணையுடைய எங்கள் தலைவியது இறுகி வளர்ந்த முலைமேல் பரந்த மெல்லிய சுணங்குபோல வண்டுகள் பலபல விதமாய் ஆரவாரஞ் செய்ய வேங்கைகள் பூத்தன; பனிவரைமேல் திலகம் பதித்ததுபோன்ற சேற் கொடியை வைத்த வாணனாகிய தென்மாறை மன்னனது உலகமெல்லாமாக வளர்ந்த புகழ்போல் திங்களைப் பரிவேடம் வளைந்தது. எ - று.

எனவே,—இது வரையும்நாளென வெளிப்படையான் உணர்த்தியவாறாயிற்று. அலகு - கூர்மை. அம்பு - கண். சுணங்கு - மாமைநிறம். கம்பலை - ஆரவாரம். பனிவரை - இமயமலை. சேல் - ஆகுபெயர். பயிலுதல் - வளைதல். ஊர் - பரிவேடம். 'வண்டு கம்பலை செய்யப்பூத்தன வேங்கை' யென்றதனால் "வேங்கை சண்பகம் வண்டுணு மலர்" என்னும் விதியான் வேங்கைப் பூவை வண்டணுகாதாதலால் இங்ஙனங் கூறியதென்னையெனின், வேங்கை மரத்திலும் சண்பக மரத்திலும் வண்டுண்ணுதிராது, உண்ணின் அதனான் மயங்கி மூர்ச்சையினை யடையும், பூவைக்கண்ட உவகையால் ஆரவாரிக்கும் அதுபற்றிக் கூறியவாறு. (உகூச)

அறிவறி வுறுத்தல்.

அறிவறி வுறுத்தல் எ - து. பாங்கி தலைமகளறிவு தலைமகற் கறிவுறுத்தல்.

வனகான் முளரி முகைவென்று வாணன்றென் மாறைவெற்பில்
கனகா வணிந்துபொற் கச்சற வீசிக் கதித்தெழுந்த
தனகாணு நுண்ணிடைத் தையனல் லாள்பழி சாற்றுவல்யான்
எனகாணி நின்பழி தான்மறைத் தாளன்ப வென்னையுமே.

இ - ள். அன்பனே! வாணன் தென்மாறை வெற்பில் நீரில் தோன்றி, மலர்மலர்தற்கு நாட்கொள்ளுந் தாமரை முகையை வென்று, கனமாகிய பொன்னணணிந்து, பொற்கச்சற வெறிந்து பெருத்தெழுந்த முலைக்கு நாணப்பட்ட நுண்ணிய இடையையுடைய தையலாகிய நல்லாள் நீ பிரிந்து செய்த பிழையை யான் சொல்லுவனென்று நாணி நினது பழியைச் சொல்லாமல் என்னையும் மறைத்தாள். எ - று.

எனவே,—இங்ஙனம் அறிவுடையாளை நீ விரைந்து வரைந்துகொள்ளெனக் குறிப்பாற் கூறியவாறாயிற்று. வனம் - நீர். நாண்முகை - மலர்தற்கு நாட்கொள்ளு முகை. நாண் - பொன்னாண்; ஓரணி விசேடம். வீசி - எறிந்து. கதித்தல் - பருத்தல். தனம் - முலை; தனந்துக்கு என நான்கனுருபு தொக்கது. (உகூ௫)

குறி பெயர்த்திடுதல்.

குறிபெயர்த்திடுதல் எ - து. பாங்கி இக்குறி யியுல்பல்ல,வேறோர் குறியிடை வருகவென்று கூறுதல்.

ஊறோர் பவரிங் குலாவவுங் கூடும்வந் தொண்சிலம்பா
வேறோர் பொதும்பரிற் போய்விளை யாடுக வேற்படையான்
மாறோர் பகைவென்ற வாணன்றென் மாறையெம் மன்னுதவப்
பேறோர் வடிவுகொண் டாலன்ன நீயுமென் பேதையுமே.

இ - ள். ஒள்ளிய சிலம்பையுடையவனே! உறுதற்றொழிலை ஆராய்ந்து திரிபவர்கள் இக்குறியில் வந்து உலாவவுங் கூடுமாதலால்,வேற்படையினாலே எதிர்ந்தோர் பகையை வென்ற வாணன் தென்மாறை நாட்டில் என்னுடைய நிலைபெற்ற தவப்பேறு ஒரு வடிவுகொண்டாலொத்த நீயும் என் பேதையும் வேறாகிய வோர் சோலையிற்போய் விளையாடுக. எ - று.

எனவே,—இக்குறிக்கண் வாரற்க எனக் குறிப்பால் வரைவுகடாதலாயிற்று. ஊறு - உறுதல். ஓர்பவர் - ஆராய்பவர். உம்மை-எதிர்மறை. ‘ வந்திங்கு’ என இயையும். பொதும்பர்-சோலை. மாறு-எதிர் ; வரீனிரண்டு மாறு வைத்தபோல “ மழைக்கண் மாதரார் ” எனப் பிறரும் ‘ மாறு ’ எதிராகக் கூறியவாறுணர்க. (உகூகூ)

பதின்மூன்றநாள்

பகல் வருவானை இரவுவருகென்றல்.

(இது வெளிப்படை.)

முத்தணி நீல மணித்தகட் டுள்ளெங்கு மொய்கொளவே
வைத்தணி சேர வகுத்தது போற்றஞ்சை வாணன் வையைப்
பைத்தணி வார்திரை தோய்கருந் தாட்புன்னைப் பாசிலைவெண்
டொத்தணி பூந்துறை வாவரு வாயிரு டூங்கிடையே.

இ - ள். முத்தினிரையை நீல நிறமாகிய நல்ல தகட்டுள் எங்குஞ் செறிவுகொளவைத்து ஒழுங்குசேர வகுத்ததுபோலத் தஞ்சைவாணனது வையையாற்றிடத்துப் பசுத்த அழகாகிய நெடிய அலை தோயப்பட்ட கரிய வடியையுடைய புன்னையினது பச்சிலையில் வெள்ளிய பூங்கொத் தணியப்பட்ட பொலிவினையுடைய துறைவனே! இருள் தூங்கப்பட்ட இடையாமத்து வருவாயாக. எ - று.

முத்தணி - முத்துநிரை. மொய்கொள் - செறிவுகொள். பைத்து - பைத்த. அணி - அழகு. வார்திரை - நெடியதிரை. கருந்தாள் - கரிய நிறத்தையுடைய வடி. பாசிலை - பச்சிலை தொத்து - பூங்கொத்து. பூ - பொலிவு. இச்செய்யுளில் இறைச்சி கூறியவா றுணர்க. (உகஎ)

இரவு வருவானைப் பகல்வருகென்றல்.

(இது வெளிப்படை.)

இழைவிளை யாடு மிளமுலை சாயற் கிடைந்த மஞ்ஞை
கழைவிளை யாடுங் கடிப்புனங் காத்துங் கலையகலா
துழைவிளை யாடு முயர்சிலம் பாவின்னு முன்பொருட்டால்
மழைவிளை யாடு மதிற்றஞ்சை வாணன் மலயத்திலே.

இ - ள். புயல் விளையாடும் மதில்சூழ்ந்த தஞ்சைவாணனது பொதிய மலையிடத்து மானைப்பிரியாது கலைவிளையாடும் உயர்ந்த சிலம்பையுடையவனே! இன்னும் உன் பொருட்டாகப் பூண் விளையாடப்பட்ட இள முலையை யுடையாளது சாயலுக் கிடையப்பட்ட மஞ்ஞை மூங்கிலிடத்து விளையாடும் நிறைந்த தினைப்புனத்தை யாங்கள் பகற்பொழுதிற் காப்போம், அங்கு வருவாயாக. எ - று.

இழை - ஆபரணம். சாயல் - இயல். இடைதல் - தோல்வியடைதல். கழை - மூங்கில். கடி - சிறப்பு. 'உழையகலாது கலைவிளையாடும்' என இதையும். 'மானைப் பிரியாது கலைவிளையாடும்' என்றதனால் நீயுந் தலைவியைப் பிரியாது விளையார்கெவென உள்ளுறை யுவமங் காண்க. (உகஅ)

புதிதுன்காநாள்

பகல்வருவானைப் பகலினு மிரவினும் பயின்றுவருகென்றல்.

(இது வெளிப்படை.) பயின்று - நெருங்கி.

குரவுங் கணியும் விரவும்வெற் பாவெய்ய குஞ்சரமேல்
வரவுந் தியதெவ்வை மாற்றிய வாணன்றென் மாறைமின்னும்
அரவும் பணியு நுடங்கிடை யாற்றல ளாற்பகலும்
இரவுங் குறிவயி னீவரல் வேண்டு மிவள்பொருட்டே.

இ - ள். குரவ மரமும் வேங்கை மரமும் ஒன்றோடொன்று கலந்திருக்கும் வெற்பை யுடையானே! வெய்ய யானையின்மேல் வரவே நடத்திய பகையை மாற்றிய வாணன் தென்மாறை நாட்டில் மின்னும் அரவும் பணியப்பட்ட ஒசியு மிடையினையுடையாள் உன்னைப் பிரிந்து ஆற்றலள் ; ஆதலால் இவள்பொருட்டுப் பகலினும் இரவினுங் குறியிடத்தில் நீ வரவேண்டும். எ - று.

எனவே,— ஓரறிவுயிராகிய மரங்களும் பிரியாது ஒன்றோ டொன்று கலந்திருக்கின்றமையால் ஐயறிவொடு கூடிய நீ பிரிந்திருக்கத் தகாதென்று உள்ளுறையுவமந் தோன்றியவா றுணர்க.

குரவு - குரா. கணி - வேங்கை. விரவுதல் - கலத்தல். உந்தல் - நடத்தல் நுடங்கல்-ஒசிதல். நுடங்கிடை - அன்மொழித்தொகை. (உகூக)

பகலினு மிரவினு மகலிவ ணென்றல்.

(இது வெளிப்படை.)

தாவாத செல்வந் தருந்தஞ்சை வாணன் றடஞ்சிலம்பா
நீவாரல் சார னிலவல ராம்பக னீடிருளார்
மாவா னிலவு நிலமங்கை வார்குழன் மல்லிகைபோல்
ஓவா திரவெறிக் குஞ்சோலை நீழலி னூடுவந்தே.

இ - ள். தன்னை யடைந்தோர்க்குக் கேடில்லாத செல்வத்தைத் தரும் தஞ்சைவாணனது பெரிய சிலம்பை யுடையானே! பகலில்வரின் விளங்கப்பட்ட அலராம்;இரவில்வரின் நீண்ட இருளார்ந்தபெரியவானிலவு நிலமங்கையது குழலின் முடித்த மல்லிகைப் பூப்போல நீங்காது சோலை நிழலினுள்ளே வந்தெறிக்கும்; ஆதலாற்சாரலிடத்து நீ வாரலை. எ - று.

தாவாத - கெடாத. நிலவுதல் - விளங்குதல். மா - பெருமை. வான் - ஆகாயம். நிலவு - நிலா. ஓவாது - நீங்காது. 'பகல் நிலவலராம்', எனவும், 'வந்தே யெறிக்கும்' எனவும்; 'சாரல்நீ வாரல்' எனவுமியையும். சாரல் என்புழி ஏழனுருபு தொக்கது. (உசூ௦)

ஊரவோ ணுடு மூருங் குலனு மரபும் புகழும் வாய்மையுங் கூறல்.

(இது வெளிப்படை.)

தலத்திற்கு மாறைக்கு மன்னவன் வாணன் றமிழ்த்தஞ்சைசூழ்
நிலத்திற்கு மாமணி யாகுநின் ஞட்டிற்கு நின்பதிக்கும் [மை
குலத்திற்கு மாசில் குடிமைக்குஞ் சீர்மைக்குங் கோதின்மெய்ம்
நலத்திற்கு மாவதன் ருல்வரை யாது நடப்பதுவே.

இ - ள். புவிக்கும் மாறைக்கும் மன்னனுகிய வாணனது தமிழ்த்தஞ்சைசூழ்ந்த நிலத்திற்கும் மாமணியாகும் நின்ஞட்டிற்கும் நின்னீள்பதிக்கும் நின் குலத்திற்கும் குற்றமில்லாத நின் குடிமைக்கும் கீர்த்திக்கும் குற்றமில்லாத நினது வாய்மைக்கும் நீ செய்யும் நல்வினைக்கும் நீ வரையாது நடப்பதாகு முறைமையன்று. எ - று.

உம்மைகள் - எண்ணின்கண் வந்தன. 'தலத்திற்குமன்னவன்' என்பதமையாதோ 'மாறைக்கு மன்னவன்' என்னல் வேண்டுமோ வெனின், மாறை தலைமுறைக்காணியாதலாற் கூறினர். சீர்மை-சீர்த்தி. மெய்ம்மை - வாய்மை. நலம் - செய்யப்படும் நல்வினை. ஆல் - ஆசை. (உசக)

ஆறுபார்த்துற்ற வச்சங் கூறல்.

ஆறுபார்த்துற்ற வச்சங் கூறல் எ - து. வரும் வழியைக் கருதி அவ்வழியிற் றிரிதரும் விலங்காற் றோன்று மச்சங் கூறல்.

புராந்தகர் செஞ்சடை வெண்பிறை போனுதற் புள்ளிமிழ்பூங் [ள்
குராந்தொடை மென்குழற் கொம்பினை வேண்டிக் கொடிமுல்லைநீ
மராந்தழு வுந்தஞ்சை வாணன்வெற் பாவல்சி தேர்ந்திலஞ்சிக்
கராந்திரி கல்லதர் வாயெல்லி நீவரல் கற்பலவே.

இ - ள். முல்லைக் கொடியானது நீண்ட செங்கடப்ப மரத்தைத் தழுவிப்படருந் தஞ்சைவாணன்வெற்பனே! புராந்தகரது சடையிற் சூடிய வெண்பிறைபோன்ற நுதலையும், வண்டுகளாரவாரிக்கும் பூங்குராமாலையணிந்த மெல்லிய குழலினையுமுடைய கொம்புபோல்வாளை வேண்டி நிலத்திற் குழியாய் ஆழ்ந்த நீர் நிலையிடத்து முதலைகள் இரைதேடித் திரியப்பட்ட கல்லதரினிடத்து இராக்காலத்து நீவருவது முறைமையன்று. எ-று.

புராந்தகர் - ஈசர். புள் - வண்டு. இமிழ்தல் - ஆரவாரித்தல். குராந்தொடை - குரவமாலை. கொம்பு - ஆகுபெயர். மராம் - செங்கடம்பு. 'மராந்தழுவும் வெற்பு' எனக் கூட்டுக. வல்சி - இரை. தேர்ந்து - தேடி. இலஞ்சி-குழிந்தாழ்ந்த நீர்நிலை. கராம் - முதலை. கல்லதர் - இருமருங்கும் நெருங்கிய வழி. எல்லி - இரவு. கற்பு - முறைமை.

ஓரறிவாகிய கடம்பு முல்லைக் கொடியைத் தழுவியதுபோல ஆறறிவொடுங் கூடிய உயர் பிறவியாகிய நீ கொடிபோல்வாளைத் தழுவுவாயாகவென்று உள்ளுறையுவமங் கொள்ளக்கிடந்தவா றுணர்க. (௨௮)

ஆற்றாத் தன்மை யாற்றக்கூறல்.

ஆற்றாத் தன்மை யாற்றக் கூறல் எ - து. தலைமகளது ஆற்றாத தன்மையை ஆற்றுதல் செய்யத் தலைவற்குக் கூறல்.

கலங்குந் தெளியுங் கனலெழ மூச்செறி யுங்கண்ணினீர்
மலங்கும் பொலந்தொடி சோரமெய் சோரு மறஞ்செய்கொலை
விலங்கும் படிறுசெய் யாக்குன்ற நாட விரைந்தளிப்பாய்
அலங்குங் கடும்பரித் தேர்வாணன் மாறை யணங்கினையே.

இ - ள். விளங்கப்பட்ட கடிய வேகத்தையுடைய வாணன் மாறையின் மறமாகச்செய்ய கொலைத்தொழிலையுடைய விலங்குங் களவுசெய்யாத மலைநாட்டை யுடையானே! கலங்குந் தெளியு நெருப்பெழப் பெருமூச்செறியுங் கண்களினீர் ததும்பும் பொன்னாற் செய்த தொடிகழல்மெய்யிளைக்குமென்று சொல்லப்பட்ட அணங்குபோல்வாளை விரைந் தளிப்பாயாக. எ - று.

அளியாவிடின் இறந்துபடுமென்பது தோன்றியவாறு. இவ்வாறு கூறவே வரைந்துகொள்வாயென்று குறிப்பாற்கூறியவாறாயிற்று. மலங்கல் - ததும்பல். சோருதல் - கழலுதல். சோருதல் - இளைத்தல். மறம் - பாவம். கொலை - கொல்லுந்தொழில். விலங்கும் என்புழி உம்மை இழிவு சிறப்பு. படிறு - களவு. குன்றநாடு - மலைநாடு. அலங்கல் - விளங்கல். பரி - குதிரை. அணங்கு - ஆகுபெயர். புன்மையறிவாகிய விலங்குங் களவு செய்யாவெனவே மேலறிவாகிய நினக்கு வரையாது களவிலொழுகத் தகாதெனக் குறிப்பாற் கூறியவாறாயிற்று. (௨௯)

காவன்மிக வுரைத்தல்.

காவன்மிக வுரைத்தல் எ - து. குறியிடத்து நீ வருவதற்கும் அவள் வருவதற்கும் இடையூறாகிய காவல் மிக்கென்று கூறுதல். மிகவுரைத்தல் - மிகவாயின துரைத்தல்.

நஞ்சா ரரவந் திரிதரு கானடு நாளிரவில்
அஞ்சாது செங்கை யயில்விளக் காவணங் கின்பொருட்டால்
மஞ்சார் மதிற்றஞ்சை வாணன்வெற் பாவரல் வன்சொலன்னை
துஞ்சாள் கடுந்துடிக் கைக்கர் காவலர் துஞ்சினுமே.